வந்தேமாதரம்.

# ...யபாரதி

# ...AYA BHARATI.

ஓர் இனிய தமிழ் மாதப் பத்திரிகை.

| | | |
|---|---|---|
| ...ர் க. | 1927-ம் வருஷம் பெப்ருவரி மாதம்<br>அக்ஷய-வருஷம் மாசிமாதம் | இதழ் ரு. |


## கீதாஞ்சலி.

முடிச்சோதியா யுனதுமுகச்சோதி மலர்ந்ததுவோ
அடிச்சோதி நீ நின்ற தாமரையா யலர்ந்ததுவோ
படிச்சோதி யாடையொடும் பல்கலனாய் நின்பைம்பொற்
கடிச்சோதி கலந்ததுவோ திருமாலே கட்டுரையே.

பயிலு... சுடரொளி மூர்த்தியைப் பங்கயக் கண்ணனை
பயில...வினிய நம் பாற்கடல் சேர்ந்த பரமனை
பயிலும் திரு...டையார் யவரேலுமவர்கண்டீர்
பயிலும் பிறப்பிடைதோ றெம்மை யாளும் பரமரே.

* * * (நம்மாழ்வார்.)

புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா வுன்னடி யென்மனத்தே
வழுவாதிருக்க வரந்தர வேண்டு மிவ் வையகத்தே
தொழுவார்க் கிரங்கி யிருந்தருள் செய் பாதிருப்புலியூர்ச்
செழுநீர்ப் புனற் கங்கை செஞ்சடைமேல் வைத்த தீவண்ணனே.

சிந்திப்பரியன சிந்திப்பவர்க்குச் சிறந்து செந்தேன்
முந்திப் பொழிவன முத்திகொடுப்பன மொய்த்திருண்டு
பந்தித்து நின்ற பழவினை தீர்ப்பன பாம்புசுற்றி
யந்திப்பிறை யணிந்தாடு மையாற னடித்தலமே.

(திருநாவுக்கரசு சுவாமிகள்)

# உதயபார

அக்ஷய ஹூ மாசி மீ க


## காந்தியடிகள் வருஃ

மகாத்மா காந்தியை அறியாதார் இந்ந
அடிகளைப் பற்றி ருஷிய ஞானி யொருவர், "இல
காந்தியை 'மிஸ்டர் காந்தி' யென்று பெயர் கூவி யழைக
டேன், அவரை 'ஏழைகளின் நண்பன்' 'மண்ணுலகில்
வனின் உண்மையான பிரதிநிதி' என்று அழைப்பேன்"
புகழ்ந்திருக்கிறார். "இயேசு ஒருமுறை சிலுவையில் மாண்
காந்தி தினந்தினம் அந்த அவஸ்தையைப் புன்னகையுட
கிறார்" என்று பாதிரிமார்கள் புகழ்ந்திருக்கிறார்கள். அ
உலகத்திற்கும், இந்தியாவிற்கும் செய்துள்ள ஊழியம் அ
றது. அருளாலயமான அவர் சரீரம் பிரயாணத்தால் ந
துன்பத்தில் துவண்டு, உபவாசத்தால் உலர்ந்து, பணி
ஒளிர்கின்றது. எனினும் தாம் தொடுத்த அறப் போர் வெ
பெறும் வண்ணம் அடிகள் மறுமுறை தேசமெங்கும் சு
பிரயாணஞ் செய்ய முன்வந்துள்ளார். தமிழ்நாடு செய்த
வத்தின் பயனாக அடிகள் ஏப்ரில்மீ இங்கு எழுந்தருளப்
ன்றார். ஒரு மாதகாலம் தென்னாட்டில் அவர் தங்கப்போ
அறிவிக்கப்பட்டிருக்கிறது.

அடிகள் வருகைக்கு நாம் செய்யவேண்டியதென்ன? கதர் அபிவிருத்திக்காகவே அவர் இங்கு வருகிறார். கதர் இயக்கம் வெறும் பேச்சளவின்றி இந்நாட்டில் நிலைபெற்ற ஓர் பெரும் இயக்கமாய்ப் போய்விட்டது. எவ்வித பலமும் இனி அதை அழிக்கமுடியாது. ஆனால் கதர்இயக்கம் சீக்கிரத்தில் முன்னேற வேண்டும். அது ஒரு வழியாகமட்டுமன்றி முடிவாகவும் விளங்குகின்றது. கதர் அபிவிர்த்திக்குள்ள இடையூறுகளை நீக்கி, முன்னேற்றத்திற்குரிய வழிகளைத் தேடுவதே மகாத்மா நம்மிடை வந்து செய்யப்போகும் வேலை. சரியான முறையில் நடத்தப் படின் வெற்றிகொடுத்து, தேசத்தில் செல்வமும், சுதந்தரமும்

பொங்கச் செய்யக்கூடிய கதர் இயக்கத்திற்கு உள்ள இடையூறு களை நாம் கண்டு களையவேண்டும். முதலாவது பொருளாதார நிலை. கதர் உற்பத்திசெய்து நாடுமுழுவதிலும் பரப்புவதற் கென்று அகிலபாரத சர்க்கா சங்கம் ஒன்று மகாத்மாவின் தலை மையின் கீழ் நடைபெற்று வருகின்றது. அதன் கிளைகள் ஒவ் வொரு மாகாணத்திலும் ஏற்பட்டு புகழத்தக்க முறையில் வேலை செய்து வருகின்றன. சென்ற டிசம்பர் மாதத்தோடு முடிவாகும் இதன் ஒரு வருஷத்திய அறிக்கையின்படி பிரஸ்தாப வருஷத் தில் ௨௪-லக்ஷம் ரூபாய் பொறுமான கதர் உற்பத்தியா யிருக்கிற தென்றும், ௨௩ லக்ஷம் ரூபாய் பொறுமான கதர் விற்பனையாயி ருக்கிறதென்றும் தெரிகின்றது. (தனிப்பட்டவர்கள் கதர் உற்பத் தியும், விற்பனையும் வேறு.)

வருஷந்தோறும் ௬0 கோடி ரூபாய் பொறுமான விதேசத் துணிகள் இந்நாட்டிற்கு வருவதையும், ௨௩ லக்ஷ ரூபாய்க்குக் கதர் செலவாயிருப்பதையும் கண்டு நாம் நகைக்கவேண்டிய தில்லை. இந்நாட்டில் ராட்டினத் தொழில் அழிக்கப்பட்டதையும், சாமான்களைத் தலையிற் சுமந்துகொண்டு வியாபாரஞ் செய்யவந்த ஆங்கிலேயர் தாங்கள் உட்கார்ந்திருந்த தெரு மூலைகளைவிட்டு சிம்மாசனம் ஏறிய கதையையும் அறிந்தவர்கள் இதைக்கண்டு ஏளனம் செய்யமாட்டார்கள்; சந்தோஷமடைந்து தாங்களும் இவ்வியக்கத்தில் ஈடுபடுவார்கள். ஆங்கிலேயர் இந்நாட்டை ஆள வரவில்லை, வியாபாரம் செய்து பிழைக்கவே வந்தனர். அந்த வியாபாரிகள் இப்பொழுது நமது அரசர்களாய் விளங்குகின்ற னர். அவர்கள் இந்நாட்டைப் பற்றிக்கொண்டது வீரத்தினாலன்று, வெம்போரினாலன்று — ஆனால் வியாபாரத்தினால். அவர்கள் ராஜ்யம் போரிற் சிந்திய இரத்தத்தின் மேல் கட்டப்படவில்லை. ஆனால் இந்தியப் பெண்மணிகள் ஓயாது நூற்றுவந்த கைராட்டி னங்கள் எரிக்கப்பட்ட சாம்பரின்மேல்தான் கட்டப்பட்டது. உற்று நோக்கினால் இதன் உண்மை விளங்கும். நம்மிடம் உடை வாங்கி அணிந்துவந்த பிறநாட்டார் தங்கள் வியாபாரத்தின் பொருட்டு நம்மை ஆண்டு நமக்குஉடையும் அளித்து வரு கின்றனர். அவர்கள் ராட்டினத்தொழிலை அழிக்கச் செய்த பல முயற்சிகளும் மகாத்மாவாலும், பலசரித்திரக்காரராலும் தெளி

வாய் எழுதப்பட்டுள்ளன. ஆரம்பமாகி இரண்டரைவருஷத்திற்குள் சர்க்கா சங்கத்தார் உ௬-லக்ஷம் ரூபாய்க்குக் கதர் செலவழித்திருப்பது பெருமுயற்சியின் பயனேயாகும்.

சாதாரணமாய்க் கதர் அணிபவர்கள் பிறநாட்டு உயர்ந்த பட்டுக்களையும், சரிகை வஸ்திரங்களையும் விரும்புவதில்லை. ரூபாய் உ௬ லக்ஷத்திற்குக் கதர் விற்றிருப்பதினால் அதற்கு இரண்டு பங்கு விலையுள்ள அன்னியத்துணி பகிஷ்கரிக்கப்பட்டிருக்கும். அதாவது அரைக்கோடிரூபாய்க்குஅதிகமானதொகை இந்நாட்டைவிட்டு வெளியே போகாமல் பாதுகாக்கப்பட்டிருக்கிறது. கதர் இயக்கத்திற்கு இரண்டாவதாக உள்ள இடையூறு நம்மில் படித்தவர்களுடைய அலக்ஷிய புத்தி. அனேகர்களுக்கு கதரில் வெறுப்பில்லை; ஆனால் விருப்பமும் இல்லை. இந்த நிலை தொலையவேண்டும். படித்தவர்களையும் கனவான்களையும் கண்டு பாமரர் பின்பற்றுகின்றனர். படித்த இளைஞர்கள்தாம் சகல நூதன வழிகளையும் சமூகத்திற்குள் கொண்டு வருகின்றனர். ஆகையினால் அவர்கள் தாம் முதலில் அன்னியத் துணியை விலக்கி நாட்டுக் கதர் துணியை அணியவேண்டும். அவர்கள் மூலமாய் எளியவர்கள், பாமரர்கள் கதர் கட்டுவார்கள். உத்தியோகஸ்தர்களும், வக்கீல்களும், வியாபாரிகளும், உபாத்தியாயர்களும், மாணவர்களும் கதர் அணிந்து ஏனையோருக்கு வழி காட்டவேண்டும். அரசாங்கத்தார் கதர் அணியக்கூடாதென்று தடை செய்யவில்லை. மந்திரிமார்கள் கதரியக்கத்தில் ஈடுபட ஆரம்பித்திருக்கின்றனர். ஹைதராபாத், போபால் முதலிய சமஸ்தானங்களிலெல்லாம் கதர் செழித்தோங்கி வருகின்றது. ஆப்கன் அரசர் கதர் அணிந்து விளங்குகிறார்! அம்மன்னர் ஒருகால் கூறிய சொற்களைக் கவனியுங்கள்:– "நாம் அன்னியர் உடைகளை வாங்கி அணிவதால், நம்மிடமிருந்து போகும் பணம் பின்னால் பகைவரின் வெடி குண்டுகளாக நமக்கே திரும்பி வருகின்றது!" காந்தியடிகள் வரும்பொழுது தமிழ் நாடு முழுதும் கதர் மயமாக விளங்கவேண்டும்.

கதர் உற்பத்தியைப் பெருக்குவதற்கும், விலையைக் குறைப்பதற்கும், விற்பனையை அதிகப்படுத்துவதற்கும் அதிகப் பணம்

தேவை. மகாத்மா வரும்பொழுது அவருக்கு ஒரு லக்ஷ ரூபாய் பணமுடிப்பு அளிக்கப்பட வேண்டுமென்று தமிழ் நாடு கதர் போர்டார் தீர்மானித்திருப்பதற்கிணங்க ஒவ்வொரு ஜில்லாவி லுமுள்ள பெரியார்களும் ஊழியர்களும் கூடி துரிதமாக வசூல் வேலையை நடத்தவேண்டு மென்று கேட்டுக் கொள்கிறோம். இந்தப் பணம் கதர் வேலையை நடத்தத் தமிழ் நாட்டிற்கு நாம் அளிக்கும் மூலதனமாகும். ஒவ்வொருவரும் ஒரு ரூபாய் கொடுத்தால் தொகை எவ்வளவோ உயர்ந்துவிடும். மகாத்மாவும் எளியவர்கள், வயோதிகர்கள் கஷ்டப்பட்டு முடிச்சவிழ்த்துக் கொடுக்கும் பணத்தையே விரும்புகிறார்.

# தாய்.

(காலஞ்சென்ற ஆசிரியர், ஸ்ரீ வ. வே. ஸு. அய்யர் எழுதியது.

"தாயின் பாதத்தை முத்தமிடுகிறவன் சுவர்க்கத்துக்குப் போகிறான்" என்றார் மகா ஞாதாவான முஹம்மது நபி. "அன்னையும் பிதாவும் முன் அறி தெய்வம்" என்று நாம் சொல்லுகிறோம். "குழந்தை வளர வளர யோக்கியனாகப் போவதும் அயோக்கியனாகப் போவதும் எல்லாம் அவனுடைய தாயையே முற்றும் பொருத்திருக்கிறது," என்று நப்போலியன் போனபார்த்து அடிக்கடி சொல்லுவான்.

தாய்க்கு அத்தனை சக்தி இருக்கிறது. அவளே ஒருவனைச் சங்கராசாரியருக்குச் சமமாயும் திருநாவுக்கரசருக்குச் சமமாயும் ஆக்கிவிடலாம். அவளே ஒருவனை டம்பாச்சாரியாகவும் துரியோதனனாகவும் ஆக்கிவிடலாம். தாய்மார் மாத்திரம் தங்களிடம் ஈசுவரன் வைத்து விட்டிருக்கிற இந்த அபாரமான சக்தியைத் தங்கள் மக்களுடைய அறிவையும் குணத்தையும் நன்றாக மலரச் செய்வதில் உபயோகப்படுத்தி வருவார்களானால் நமது நாட்டிலுள்ள வறுமையும், துக்கமும் சிறுமையும் பஞ்சாய்ப் பறந்து போய்விடும்.

நாம் நம்முடைய நாட்டைப் பற்றி அடிக்கடி பெருமை பேசிக்கொள்ளுகிறோம். நம் நாடும் நாம் கர்வத்தோடு நினைக்கத் தகுந்த நாடே. ஜோஸெப்த மேஸ்தர் என்ற பிரெஞ்சுக்காரன் சொல்லும் வார்த்தைகளைச் சற்று மாற்றிச் சொல்லுவோமானால்; நமது மாதர் மகா காவியங்கள் ஒன்றும் எழுதவில்லை என்பது வாஸ்தவமே. அவர்கள் ராமாயணம் பாடவில்லை, சிலப்பதிகாரம் எழுதவில்லை, திருக்குறளை உலகத்துக்குத் தரவில்லை, அரிச்சந்திர நாடகம் இயற்றவில்லை; அவர்கள் யானைக் குகைகளைக் கட்டவில்லை; மஹாபலிபுரத்துக் கற்கோயில்களை வெட்ட வில்லை; 'சலவைக்கல்லில் சமைத்த ஓர் கானம்,' என்னும் படியான தாஜ்மஹாலை நிர்மிக்கவில்லை, அஷ்டபதி பாடிவைக்கவில்லை; ராஜகோபால விக்கிரகம் வார்த்துவைக்கவில்லை; ஸ்ரீரங்கத்துப் புலி வேட்டையை வெட்டிவைக்கவில்லை; பீஜகணிதம் கண்டு பிடிக்கவில்லை; தூர திருஷ்டிக் கண்ணாடிகள் அமைக்கவில்லை; நீராவியந்திரம் சமைக்கவில்லை; ஆனால் இவை அனைத்தையும்விட உயர்ந்தவேலை ஒன்று அவர்கள் செய்திருக்கிறார்கள். ஏனெனில் அவர்களன்றோ யோக்கியர்களேயும் தர்மாத்மாக்களேயும் வளர்த்திருக்கிறார்கள்! இந்த யோக்கியர்களையும் தர்மாத்மாக்களையும் விட உத்கிருஷ்டமான பொருள்களும் உலகத்துண்டோ?

ஆனால் சென்ற இரண்டு தலைமுறைகளாக நம்முள் உலகத்தாரின் கண் முன்னே நாம் பெருமை பாராட்டிக் கொள்ளத் தகுந்த தர்ம வீரர்களாகட்டும் வேறு வீரர்களாகட்டும் தகுந்த அளவிற்கு வரவில்லை. நமது நாட்டின் ஈன நிலைமையே அதற்குச் சான்றாய் நிற்கிறது. 'வீரர்கள் வசிக்கும் நாடு இத்தனை கேவலமான ஸ்திதியில் இருக்கமுடியாது. நாட்டில் வீரியம் இல்லை. காரணம் தாய் தர்மம் தேசத்தில் குன்றிப்போய்விட்டது. வரும் தலைமுறையில் வீரியம் வளரவேண்டுமானால், நம் நாட்டுப் புருஷர் மற்றை நாட்டவருக்குச் சரி சமமாய் நிற்கவேண்டுமானால், பாரதநாடு முன்னாளில் பெற்ற பேறும், அதற்கு மேலிட்ட பேறும் பெறவேண்டுமானால் இப்பொழுது தேசத்தில் தாய்மை வளரவேண்டும்.

குழந்தைக்கு நாலு வயதானதும் ஒருஸ்திரீ தன் குருவைக் கண்டு, "இன்னும் எத்தனை வருஷம் கழித்துக் குழந்தைக்குக்

கல்வி பயிற்றலாம்?'' என்று கேட்டாள். அதற்குக் குரு, ''ஐயோ, நான்கு வருஷங்களை வீணாக்கிவிட்டாயே; குழந்தை என்றைக்கு முகம் பார்த்துச் சிரிக்க ஆரம்பிக்கிறதோ அன்றைக்கே அதற்குக் கல்வி ஆரம்பித்து விடவேண்டும்'' என்றான். தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும் ஆகையால் குழந்தையாயிருக்கும் போதே குழந்தையின் பழக்க வழக்கங்களைக் கவனித்து நல்ல வழக்கங்களேற்படும்படி உன்னிப்பாய்ப் பார்த்துவர வேண்டும்.

குழந்தைக்குப் பேசத்தெரிந்ததும், அதற்கு வசைச் சொற்கள் சொல்லித்தருகிறார்கள். கெட்டபேச்சுக்களை அதன்வாயிலிருந்துகேட்டதும் தாய்க்கும்தந்தைக்கும்பாட்டிமாருக்கும்ஆனந்தம் பொங்கிவிடுகிறது. ''அம்மாவை எந்தக் காலாலுதைக்கிறது.?'' என்று கேட்கும்போது குழந்தை இடது காலைத் தூக்கிவிட்டதினால் தகப்பனாருக்கும் பாட்டிக்கும் உண்டாகும் பூரிப்புக்கு எல்லையிருப்பதில்லை. ஆனால் பிற் காலத்து அஸத் வசனங்களுக்கும் அஸத்துச் செயல்களுக்கும் இது வித்தாகும் என்று அவர்கள் அறிந்து கொண்டார்களானால் அவர்கள் குழந்தைகளுக்கு இவற்றைக் கற்பித்துத் தரமாட்டார்கள்! 'இது என்ன, சிறு குழந்தை தானே, அது அதன் வயதில் நல்ல பழக்கங்கள் வராமலா போய் விடும்?' என்று கேட்பாரும் இருப்பார்கள். ஒரு சிறு பையன் ஏதோ முட்டாள்தனமான விளையாட்டு ஒன்று விளையாடிக்கொண்டிருக்கையில் பிளாத்நன் என்ற பேருள்ள அதேனிய ஞானி அவனைக் கண்டித்தானாம். ''என்ன, ஒன்று மில்லாத சங்கதிக்கு என் மேல் கோபிக்கிறாயே?'' என்று பையன் கேட்டதற்கு, 'தம்பி, இது உனக்குக் கெட்ட வழக்கத்தை உண்டாக்கும்; வழக்கம் ஒன்றுமில்லாத சங்கதி என்று நினைக்கிறாயா?' என்று பதில் சொன்னானாம். குழந்தையை நாம் மேஜை நாற்காலிபோல ஒரு மாதிரி ஜட வஸ்து என நினைக்கிறோம். இன்று கெட்ட வார்த்தை சொல்லிவைத்தால் கெட்ட வார்த்தை பேசுகிறது. நாளைக்கு நல்ல வார்த்தைகள் சொல்லித் தரத் துவக்கி விட்டால் கெட்ட வார்த்தைகள் மறந்து போய்விடும் என நம்புகிறோம். ஆனால் நாம் கற்பிக்கும் ஒவ்வொரு சங்கதியும் குழந்தையின் மனதில் வேரூன்றி அதுவாக நம்மைக் கேட்காமல் முளைத்துத் தளைத்துப் பெருக ஆரம்பிக்கின்றது. வயதான பிறகு பிள்ளை

சொன்னது கேட்க மாட்டேனென்கின்றானே! என்றுசொல்லும் எத்தனை தாய் தந்தைமார் குழந்தைக்கு முதல் மூன்று வருஷங்களில் தங்களையும் பந்துக்களையும் அவமதித்துப் பேசவும் அடிக்கவும் உதைக்கவும் கற்றுத்தராம லிருந்தார்கள் என்று பார்த்தால் அனேகமாய் ஒருவரும் இல்லை என்று தான் ஏற்படும்.

குழந்தையைப் பயமுறுத்திவிடுவது நம்முள் ஒரு துர் வழக்கம். ஊட்டும் ஆகாரத்தை அது சாப்பிடாமற் போனால் நமக்குப் பிடிக்காத ஒரு காரியத்தை அது செய்தால், உடனே பூச்சாண்டி வருகிறான் என்று பயமுறுத்திவிடுகிறோம். அந்த நிமிஷத்துக்கு இதனால் நமக்குச்சல்லியம் குறையலாம். ஆனால் குழந்தை ஆயுள் பரியந்தம் பயங்காளியாகி விடுகிறது. பயமே இல்லாதபடி குழந்தைகளை வளர்க்கவேண்டும். தமக்குத் தொந்தரவு சற்று குறைவதற்காக ஆயிரங்காலத்துப்பயிரைக் கெடுத்துவிடுகிறோம். ராஜீய தேசியக் காரியங்களில் உழைத்துவரும் நமது தேசபந்துக் களில் பெரும்பாலர் ராஜாங்க உத்தியோகஸ்தர்களின் மிரட்டல்களுக்குப் பயந்து போய் நியாயக் கக்ஷியையும் நியாயப் பாதையையும் விட்டு விடுகிறார்கள். ஏனென்றால், இதற்குக் காரணம் சிறுபோதிலேயே அவர்கள்மனதில் அவர்களுடைய தாய்தந்தையர்புகுத்தி வளரவிட்ட பயம் என்னும் புழுவேயாகும். குழந்தைகள் துஷ்டர்களாய்வேண்டுமானாலும் போகட்டும். ஆனால் அவர்களைப் பயங்காளிகளாக மாத்திரம் ஆக்கி விடாதீர்கள்! நெல்ஸன் என்னும் ஆங்கிலக் கப்பல் வீரன் சிறு பையனாக இருக்கும்போது ஒரு நாள் முழுதும் காட்டிலும் மேட்டிலும் அலைந்து திரிந்துவிட்டு சாயங்காலம்தான் வீட்டுக்கு வந்தானாம். அவன் பாட்டியார், "தெரியாத இடங்களெல்லாம் சுற்றினாயே, உனக்குப் பயமாக இல்லையா, அப்பனே?" என்று அவனைக் கேட்டதற்கு "பயம்எப்படி இருக்கும்? பாட்டிசொல்லு," என்று பதில் சொன்னானாம். ஜப்பானில் ஸாமுராயர்களின் குழந்தைகளுக்கு ஐந்து வயதானதும் அவர்களைத் துணையின்றிச் சுடுகாட்டங்கரைக்கு அனுப்பி, அங்கிருக்கும் எலும்புகளைப் பொறுக்கி வரச் சொல்வார்களாம். ஸ்பார்த்தாவில் மன உறுதி காட்டாத குழந்தைகளை ஜாதியிலேயே சேர்த்துக்கொள்ள மாட்டார்கள். நம் நாட்டிலும் அந்தக்காலத்தில் பையன்களைக் குருகுலத்துக்கு

அனுப்பியதன் முக்கியநோக்கம் பையன்களுக்கு மாடுமேய்ப்பதிலும், விறகு, சமித்து முதலியன சேகரிப்பதிலும் சரீர திடமும் மனஉறுதியும் வளரவேண்டும் என்பதே. இப்படிவளர்ந்த ஸ்பார்த்தர், வேறு துர்க்குணங்கள் புகுந்து அவர்களை அழித்துவிடுகிறதற்கு முன்னெல்லாம், கிரேஸில் மகா வீரர்களாக விளங்கினார்கள்; ஜப்பானிய ஸாமுராயர் தங்கள் நாட்டிலும் 20, 30 மடங்கு பெரிதான ருஷ்யா நாட்டு ஜனங்களை இரண்டு வருஷங்களில் வென்று அழியாப் புகழ் தேடிக்கொண்டார்கள்; நம்முடைய முன்னோர்களும் வீரத் துறைகளில் தங்களுக்கு யாரும் நிகரில்லை என்று சொல்லும்படி நடந்து கொண்டார்கள். நம்முடைய தாய்மாரும் தங்கள் பிள்ளைகள் சிவாஜிபோலவும் ஹைதர்ஆலி போலவும், பிருதிவி ராஜன் போலவும் நானுபர்நவிஸ் போலவும் வேள், பாரியைப் போலவும், தேசிங்கைப்போலவும், பிரகலாதனைப்போலவும், துருவனைப் போலவும், குரு கோவிந்தன் புத்திரரைப் போலவும் தயானந்த சரஸ்வதி போலவும் நிர்ப்பயர்களாய், தைரிய லக்ஷ்மி பிரசன்னர்களாய் இருக்கவேண்டும் என்ற நோக்கத்தோடு வளர்த்தார்களானால் நாட்டில் தீரம் பெருகும்; அவர்களுக்கும் வீரத் தாய்மார் என்ற பேர் உண்டாகும்.

"அவர்கள் வீட்டுக் குழந்தை எத்தனை சாதுவாக இருக்கிறது? ஏன்தான் இப்படித் துடுக்காய்த் திரிகிறீர்களோ?" என்ற வார்த்தைகள் நம் தாய்மாரின் வாயினின்று வருவதை நாம் அடிக்கடி கேட்டிருக்கிறோம். கெட்ட பேச்சுகள், கெட்ட நடத்தைகள் இவைகளைக் கண்டித்தால் நாம் அதற்கு யாதொரு ஆக்ஷேபனையும் சொல்லமாட்டோம். ஆனால் பந்து விளையாடுவது, கோலி விளையாடுவது, தேகப்பயிற்சி செய்வது, இளமைக்குரிய உற்சாகத்தினால் ஆடுவது பாடுவது முதலிய எதைச் செய்தாலும் நமது தாய்மாரும் கிழவரும் அதைத் துஷ்ட காரியம் என்று மதித்துக் குழந்தைகளை அடக்கிவிடுகிறார்கள். இது குழந்தைகளின் வளர்ச்சியைக் கெடுத்து விடுகிறது. நாலு பையன்களோடு ஓடி ஆடி விளையாடாத குழந்தை பெரியவனாகும் போது மனிதரிடம் மருள்கிறான். வெட்கப் படுகிறான் ஒரு காரியத்தை விதரணையாய்ப் பார்க்கும் சக்தி அவனுக்கில்லாமற் போய்விடுகிறது. 'கைம் பெண்டாட்டி வளர்த்த கழிசிறை' என்ற வசனவ

நாம் அடிக்கடி கேட்கிறோம். தகாத விஷயங்களில் செல்லம் கொடுக்கப் பட்டு இப் பையன்களில் அநேகர் துன்மார்க்கத்தில் சென்று விடுவதை நாம் பார்க்கிறோம். ஆனாலும் இப் பையன்களிடத்தில் ஒரு உரம் இருக்கிறது. இவர்கள் குத்திக்கொண்டு வா என்றால் வெட்டிக்கொண்டு வருவார்கள். மனிதரைக்கண்டு பயப்பட மாட்டார்கள். காரியங்களை முடிப்பதற்கு இடையூறுகள் நேர்ந்தால் அவற்றைக் கண்டு பின் வாங்க மாட்டார்கள் இழுத்து வரிந்து கட்டிக்கொண்டு பல துறைகளாலும் முயன்று முனைந்துபார்த்துக் காரியத்தைச் சமாளித்தே தீருவார்கள். காரணம், சிறுவயதில் இவர்கள் தாய்மார்களால் யதேச்சையாய் விடப்பட்டதே. இவ் வளர்ப்பிலுள்ள தீய பாகங்கள் அனுசரிக்கப்படத்தக்கன அல்ல. ஆனால் இதில் நல்ல பாகமான சுதந்தரம் எல்லாவிதத்தாலும் குழந்தைகளுக்குக் கொடுக்கப்படத் தக்கது. அதார்மீகமான வழியில் மாத்திரம் குழந்தையின் சுபாவத்தைப் போகவிடக்கூடாது. ஆனால் மனதிற்கும் சரீரத்திற்கும் யதேச்சை அத்தியாவசியமானதாகையால் அளவறிந்து அவர்களை யதேச்சையாய் விளையாடவும் காரியங்கள் பார்க்கவும் விட அஞ்சக்கூடாது. (தொடரும்)

## லீலா சுகர்.

(ஸ்ரீ சுத்தானந்த பாரதியார் எழுதியது.)

(௱கூஎ-ம் பக்கத் தொடர்)

லீலாசுகர்:- கண்ணே! உனது இன்பத்தை யடைந்தேனே. போதாதா?

சிந்தாமணி:- ஐயனே! எனது இன்பம் சிற்றின்பம். எனது இளந்தோல் தளர்ந்து சுருங்கும் பருவம் வந்துவிடும். அப்போது அச்சிற்றின்பமும் சுருங்கிவிடும். தங்கள் மனதிலுள்ள காதலும் வெய்யிலில் மஞ்சள்போல் மங்கும். தங்களை என்பால் ஈர்ப்பது இளமையின் குற்றமே, மனமயக்கமே, ஆனால் என்றும்

அழியாத பேரின்பம் ஒன்று உளது. அது கடவுளின்பம். அதுவும் நமது மனத்தாலேயே அடையத்தக்கது. நாளையே அழியும் மலக்குடலாகிய என்பால் செலுத்திய அன்பில் ஒரு சிறிதளவேனும் கடவுளிடம் செலுத்தினால் தாங்கள் நித்தியானந்தம் பெறுவீர்கள். இதை எண்ணுவீர்களாக. என்பாலுற்ற மையலை இன்றேயொழியுங்கள். மனக் கண்களைத் திறந்து அதன் கருமணியிலுள்ள மாதவன் பால் மையல் பூணுங்கள்!

இம்மொழிகள் லீலாசுகரைத் தட்டி எழுப்பின. மனதில் பாய்ந்தன. திண்ணென்று உண்மையறிந்தான். காமஎண்ணத்தைவிடுத்து, கடவுள் எண்ணமானான். நேற்றிரவு தான் கேட்ட பாகவினியின் பாட்டுகள் அவன் நினைவிற்கு வந்தன. அதில் வந்த சிந்தாமணி ஒவ்வொருவர் மனதிலும் கோயில் கொண்டொளிரும் நந்தா வொளியாகிய இறைவனென்றே யறிந்தான். "கண்ணே" என்று வேசையை அழைப்பதை விடுத்து "என் கண்ணா" என்று வாசுதேவனைக் கூவினான். இதுகாறும் தான் வாழ்ந்த வாழ்கை நரகவாழ்க்கைஎன்றெண்ணினான். பிணிக்கும், அழிவிற்கும் வழி காட்டும் அவ்வாழ்க்கையை வெறுத்தான். தன்புல்லிய வாழ்வை எண்ணி மனம் சிறுத்தான். கண்ணனைஎண்ணி இன்பம் பெருத்தான். உலகஇன்பத்தை மறுத்தான்; துறவை உடுத்தான்; கடவுளின்பத்தை அடுத்தான். கண்ணனின் இன்பமே இன்பம், மற்றதெல்லாம் துன்பம் என்பதை நன்குணர்ந்தான். கண்ணனின் கீதங்களைப் பாடிக்கொண்டு தலங்கள் தோறும் சுற்றக் கிளம்பிவிட்டான். தன் பொறிகளை அடக்கி மனக்கோயிலில் மாதவனை வைத்துத் தவமிருந்தான்.

> "பைப் பணமும் போன்ற பரும வுடலுயிரை
> மெய்க் கடவுள் மெய்த் தொண்டிற் பெய்" (அறநூல்)

என்றபடி கடவுட் பணிக்கு உயிரையும் உடலையும் ஈந்தான்.

நமது லீலாசுகர் ஒருநாள் கங்கைக் கரையில் ஆழ்ந்த தியானத்தில் அமர்ந்திருந்தார். அப்பொழுது ஒரு சதங்கையொலி 'கல்' லென்று கேட்டது. லீலாசுகருடைய தியானத்தை அது கலைத்தது. கண் விழித்தான். ஒரு அழகிய மாது தன் முன்

அன்னம்போல் நடந்து செல்லக் கண்டான். அவள் மதிமுகமும் வாள் விழியும் அவன் மனதைப் பழைய நினைப்பில் ஊன்றினது. காதற்கள்வன் அவன் மனதைச் சிறிது கொள்ளை கொண்டான். அப் பெண்மணியின் அடிச்சுவடுகளில் அவன் மார்பு பதிந்தது. அம்மாதும் ஓர் சிறந்த தெய்வபக்தனையே வரிக்க எண்ணியிருந்தாள், நமது லீலாசுகருக்கு இணங்கினாள். அழகாக அலங்கரிக்கப்பட்ட ஒரு தனிமையான அறையில் காதலர் இருவரும் கூடினர். திடீரென்று லீலாசுகரின் மனம் மாறியது. தான் செய்யப் புகுந்த காரியத்தை வெட்கமுடன் எண்ணினான். சிந்தாமணியை நீத்தது முதல் கடவுளன்பில்-தான் அடைந்த இன்பத்தை எண்ணினான். கண்ணன் கழலிணையில் கருத்தை ஊன்றினான். தன்னெதிரே நின்ற மாது அன்னை வடிவாகினள். "ஹே! அன்னையே! என் மாயை தங்களைப் பெண்டாள நினைத்தது. இப்பொழுது என் அறிவு விழித்துக்கொண்டது. இனி தாங்கள் எனது அன்னை, தங்களைப் பணிகின்றேன். ஒரு வரம் தங்களிடம் கேட்கிறேன். தங்கள் கூந்தலிற் சொருகியிருக்கும் இரண்டு ஊசிகளையும் தயவுசெய்து எனக்குத் தாருங்கள்" என்றான். மனதில் பக்தி நிறைந்த அவ்வன்னையும் தன் கூந்தல் ஊசிகளைக் கொடுத்தாள். லீலாசுகர் பெண்களைக் காதலுடன் பார்த்த தன் இரண்டு கண்களையும் அவ்வூசிகளால் குத்தி அவித்தனர். ஏ! புறக்கண்காள்! உங்கள் வேலை முடிந்தது. பெண்களைக் காமத்துடன் பார்க்க இனி உங்களால் இயலாது! எனது அகக்கண்களே! நீங்கள் விழித்து, கண்ணனைக் காண்பீர்களாக" என்றான்.

நமது லீலாசுகர் அன்றுமுதல் கண்ணனின் வடிவைக்கருத்தினிலமைத்து எண்ணி யெண்ணி வருகிறார். மெல்ல மெல்ல நடந்து பிருந்தாவனத்தை யடைந்தார். அங்கே கண்ணனைக் கண்டு, கண்ணனை எண்ணி, கண்ணனைப் பாடி, கண்ணனே மூச்சாய், கண்ணனே உணவாய் "கிருஷ்ண கர்ணாமிர்தம்" பாடி கண்ணனின் பதத்தை நண்ணினார்.

"திருந்தின வாழ்க்கை மருந்தினும் இனிது."

# நீதியின் நிலையம்.

## பரதன்.

(முன் ௱௪௧-ம் பக்கத் தொடர்)

(திருவாளர். ஆர். பி. சேதுப்பிள்ளை, பி. எ., பி. எல். எழுதுவது.)

அயோத்தி மாநகரத்தில் உற்ற தொன்றும் உணராத பரதன் முனிவரனுப்பிய திருமுகத்தைக் கையிலேற்று, தன் ஐயனைக் கண்டு களிக்கலா மென்னும் ஆர்வத்தால் கேகய நாட்டினின்றும் புறப்பட்டான். அயோத்திமாநகர்ப்புறம் எய்திய போது அந் நகரம் உயிரற்ற ஓவியம் போல் ஒளி யிழந்து நின்ற நிலையினைக் கண்டான். நந்தன வனங்களில் உதிர்ந்து உலர்ந்த நறு மலர்களையும், அழகிய சோலைகளில் சிந்தி யழிந்த தீங் கனிகளையும், வளம் நிறைந்த வயல்களில் சாய்ந்து சிதறிய சாலிக் கதிர்களையும் பரதன் தன் கண்களால் நோக்கினன். நகர வீதிகளில் குழ லொலியும், யாழொலியும் அறவே அடங்கி, நகர மக்களது முகங்களெல்லாம் கதிரவனைக் காணாத கமலம் போன்று குவிந்திருக்கக் கண்டான். இவ்வாறு சோகமே கோலமாகக் கொண்டு விளங்கிய நகரத்தைக் கண்ணுற்ற பரதன் யாது மறியாது திகைத்தான். திருமகள் அந்நகரத்தினின்றும் அகன்றாள் என்று அறிந்து வருந்தினன். அந் நிலையில் அரசனது அரண்மனை வாயிலை வந்தடைந்தான். அங்கு அரியணைமீது அரசனைக் காணாது அகன்ற மாளிகை முழுதும் தேடினன். எங்கும் அரசனைக் காணாது ஐயுற்றான். அப்போது அன்னையான கைகேயி தன் தோழியின் வாயிலாக மைந்தனைத் தன் பால் அழைத்தாள். பரதன் அன்னையைக் கண்டு அடிபணிந்து, “அம்மையே! என் தாதையைக்கண்டு வணங்கக் காதலுறுகின்றேன். அவர் எங்குள்ளார்?” என்று இரு கரங்களையும் குவித்து வினவினன். அந் நிலையில் உண்மையை ஒளிக்க இயலாத கைகேயி, “ஐயனே! மன்னன் வானுலகம் எய்தினன்” என்று மனம் பதறாது கூறினள். அவ்வுரை கேட்ட பரதன், கண்களினின்றும் கண்ணீர் தாரை தாரையாய்ப் பெருக அறிவு சோர்ந்து மண்மேல் விழுந்தான்—எழுந்தான்—ஏங்கினன்—இரங்கினன். “அந்தா தந்தாய்! ஒப்புயர் வற்று விளங்கும் உத்தம மைந்தனான இராமனை

நீ எவ்வாறு பிரிந்து சென்றாய்?" என்று ஏங்கினான். தவம்செய்து பெற்ற தலை மகனுக்கு மணி முடி தரிக்கும் மணக் கோலத்தைக் காணும் பெருமை பெறாது போயினையே என்று அழுதாற்றினான். அப்பால் ஒரு வாறு மனந்தேறி, "இனி என் தந்தையும் தாயும், தெய்வமும் தமயனும் இராமனே யாதலால் அவனது பாதம் பணிந்து என் பெருந் துயர் தீர்ப்பேன்" என்று எழுந்தான். அப்போது கைகேயி தன் மைந்தனை நோக்கி, "ஐயனே, இராமன் தம்பியோடும் சீதையோடும் கானகம் சென்றான்." என்று கூறினாள். 'கானகம் சென்றான்' என்னுங் கடுஞ்சொல் பரதனது செவிகளில் சுடு சரம் போல் பாய்ந்தது. "கானகம் செல்வதற்கு இராமன் என்ன தவறிழைத்தான்? அது தெய்வத்தின் சாபமோ? விதியின் செயலோ?" என்று விம்மி யழுதான். பின்னும் அருகே யிருந்த அன்னையை நோக்கி, "அன்னையே! இராமன் கானகம் சென்றது மன்னவன் வானகம் சென்ற பின்னரோ? அதன் முன்னரோ?" என்று வினவினான். "மன்னவன் இருக்கவே மைந்தன் கானகம் சென்றான்" என்று கைகேயி கூறலும், பரதன் ஒன்று மறியாது திகைத்து நின்றான். "பெற்றவனிருக்கப் பிள்ளை கானகம் செல்ல நேர்ந்ததென்னே? அவன் கானகம் சென்ற பின்னர் என் தந்தையார் வானகம் செல்ல வாய்த்த தென்னே? இவற்றை விளங்கக் கூறவேண்டும்," என்று வினவினான். அப்போது கைகேயி தன் அரிய மைந்தனை அருளொடு நோக்கி, "ஐய, மன்னனிடம் இரு வரங்கள் பெற்றேன். ஒன்றினால் இவ் வரசாங்கத்தை உனக்கு ஆக்கினேன். மற்றொன்றால் இராமனை வனத்திடைப் போக்கினேன். இதைக் கண்டு மனம் பொறாத மன்னவன் உயிர் துறந்தான்" என்று வினயமா யுரைத்தாள்.

தன் தமயன் கானகச் சென்றதற்கும், தந்தை வானகச் சென்றதற்கும் தன் தாயாகிய பாதகியே காரணமென் றறிந்து பரதன் அளவிறந்த சீற்றங் கொண்டான். அவன் கண்களில் தீப் பொறி பறந்தன. கன்னம் துடித்தது. வாய் மடித்தது. தாயின் தன்மை சிறிது மில்லாத கொடியவளைக் கொன்று தன் கோபத்தைத் தீர்க்கத் துணிந்தான். ஆயினும் தாயைக் கொன்றால் தமயன் தன்னை வெறுப்பானே யென்று அஞ்சி யடங்கினான். சிறிதும் கலக்கமில்லாது நின்ற கைகேயியை நோக்கி,

"நாயகன் முனியும் என்று அஞ்சினேன் அலால்
தாயெனும் பெயரெனத் தடுக்கற் பாலதோ?"

என்று கடு கடுத்துக் கூறினான். அப்பால் பலவாறாக, அழுது புலம்பி, "ஐயோ? இப் பாவியின் முன்னர்இனி இருக்க லாற்றேன். மாசற்ற கோசலையின் பாதம் பணிந்து என் மனத் துயர் போக்குவேன்." என்று சொல்லி எழுந்து சென்றான்.

குலத்திற்கும், பொறுமைக்கும் இருப்பிடமாய் விளங்கிய கோசலையைக் கண்டான். அவளடிகளில் விழுந்து அழுது அரற்றிக் கண்ணீர் பெருக்கினான். மைந்தனது தன்மையைக் கண்ட கோசலை மனமுருகி,

"மையறு மனத்து ஒரு மாசுளான் அலன்
செய்யனே என்பது தேரும் சிந்தையாள்
கைகயர் கோமகள் இழைத்த கைதவம்
ஐய, நீ யறிந்திலை போலுமால் என்றாள்."

அன்னையின் சூழ்ச்சியைப் பரதன் அறியான் என்றறிந்த கோசலை மனங்குழைந்து, "மன்னர் மன்னவா! நின்னை யொப்பவர் இக் குலத்திலுண்டோ?" என்று வாயாரப் புகழ்ந்து வாழ்த்தினாள்.

அப்பால் பரதன் தன் தந்தையாய தசரத மன்னனுக்கு ஈமக்கடன்கள் இயற்றத் தொடங்கினான். அப்பொழுது அருகே நின்ற அருந்தவ முனிவன் பரதனை நோக்கி, "ஐயனே, நின் அன்னை செய்த தீமையால் அரசன் நின்னையும் துறந்து ஆவி நீந்தான். ஆதலால் இவ் வுரிமைகள் செய்வதற்கு நீ உதவாய்" என்று கூறினான். அந் நிலையில் பரதன் நெருப்பில் விழுந்த மலர் போல நெஞ்சம் கருகினான். "அந்தோ! இரவி குலத்துப் பிறந்தும் இழக்கலாகாத இவ்வுரிமையை இழந்த பாவியானேன்." என்று பதைத்தான். தன் அன்னை செய்த தீமையை எண்ணி யெண்ணி ஏங்கினான். தம்பியாய சத்துருக்கனைக் கொண்டு தாதையின் ஈமக்கடன்களை முற்றுவித்தான்.

அப்பால் முனிவரும் அமைச்சரும் பரதனை அணுகி, "ஐயனே, இவ்வரசாங்கம் இனி உனக்கே உரியதாகும். இதனை

நீயே ஏற்று அரசுபுரிதல் நீதியும் முறைமையு மாகும்" என்று எடுத்துரைத்தார்கள். அவ்வுரைகேட்ட பரதன் நஞ்சுண்டவன் போல நடுங்கி கண்ணீர் பெருக்கினன். முறைமை தவருத முனிவரைப் பார்த்து, "ஐயனே! மூத்தோனிருக்க இளையோன் அரசு புரிதல் முறையோ? மூன்றுலகுக்கும் தலைவனான இராமன், கந்த மூலம் புசித்துக் கானகத்தே வருந்த நான் இங்கு அரசனய் அமைந்திருத்தல் ஆகுமோ? அப் பெருமானைக் கானகத்தில் கண்டு இங்கழைத்துவந்து அவனிடம் அரசாங்க பாரத்தை ஒப்புவிப்பதே முறையாகும் அரசுரிமையை ஏற்றுக் கொள்ள அவன் மறுப்பானுயின் நானும் அவனுடன் கானகத்தே யுரைந்து கடுந்தவம் புரிவதே யேற்றதாகும்." என்று உறுதியாகக் கூறினன். அதைக்கேட்ட அமைச்சர் ஆன்றோராய அனைவரும் பாதனது நீதியின் நேர்மையைப் பாராட்டிப் புகழ்ந்து வாழ்த்தினர்கள்.

அப்பொழுதே பரதன் எழுந்து நால்வகைச் சேனையோடும் தாயார் மூவரோடும் தம்பியோடும் கானகம் சென்ற கமலக் கண்ணனைத் தேடி யழைத்துவரப் புறப்பட்டான். அரசகுமாரனுக்குரிய அழகிய கோலத்தைக் களைந்தான். சடை முடியும் மரவுரியும் தரித்தான். அறுசுவை யுணவை அறவே மறந்தான்.

"அல்லணை நெடுங்கண்ணீர் அருவியாடினன்
கல்லணை கிழங்கொடு கனியும் உண்டிலன்
வில்லணைத் துயர்ந்த தோள் வீரன் வைகிய
புல்லணை மருங்கில் தான் பொடியில் வைகினன்."

என்று கம்பர் பெருமான் கூறுமாறு கண்ணீரைத் தாரை தாரையாய் வடித்துக்கொண்டு, கந்தமூலங்களும் அருந்த மனமற்றவனய் தமயன் தங்கிய இடங்களில் உள்ள பொடியில் தானும் தங்கி பரதன் வழிநடந்து சென்றான்.

செல்லும் வழியில் கங்கையாறு குறுக்கிட்டது. கங்கைக் கரையின் நாயகனன குகனென்பான், படையோடு வருகின்ற பரதனை எதிர்க் கரையினின்றும் நோக்கினன். தமயனுன இராமனை நாட்டினின்றும் அகற்றியதோடு அமையாது காட்டி

னும் அவனை வெல்லுங் கருத்தோடு பரதன் படைகொண்டு வந்தான் என்று கருதினான். உடனே தனது படைக்கலங்களை அணிந்துகொண்டு,

அஞ்சன வண்ணன் என் ஆருயிர் நாயகன் ஆளாமே
வஞ்சனையால் அர செய்திய மன்னரும் வந்தாரே.

என்று மிகுந்த சீற்றத்தோடு பரதனது சேனையை அழிக்கப் புறப்பட்டான். இவ்வாறு போர்க்கோலம் புனைந்துநின்ற குகனைக் கண்ட பரதன் ஒன்றுமறியாது திகைத்துநின்றான். அப்போது குகனது பெருமையை அறிந்த பரதனது தேர்ப்பாகன், “ஐயனே! அக்கரையில் தோன்றுகின்ற வீரன்,

“கங்கையிரு கரையுடையான் கணக்கிறந்த நாவாயான்
உங்கள் குலத் தனிநாதற் குயிர்த்துணைவன் உயர் தோளான்
வெங்கரியின் ஏறனையான் விற்பிடித்த வேலையினான்
கொங்கலரும் நறுந்தண்தார் குகனென்னும் குறியுடையான்.”

என்று அவனது பெருமையை அறிவித்தான். அவ்வேடர் வேந்தன் இராமனது உயிர்த்துணைவன் என்றறிந்த பரதன், பேரன்பு கொண்டு அவனைக் காணுங் காதலால் சேனையைப் பின்னே நிறுத்தி தானும் தம்பியுமாகப் புறப்பட்டான். மரவுரி தரித்து, மாசடைந்த மெய்யோடு,கண்கள் கலங்கி கங்கை யாற்றை நோக்கி வந்த பரதனை குகன் அமர்ந்து நோக்கினான். “ஐயோ! இந்நம்பி எனை நாயகனைப் போலவே விளங்குகின்றான். மாசற்ற தவவேடம் புனைந்து நிற்கின்றான். கல்லும் கறைந்துருகுமாறு கண்ணீர் விடுகின்றான். தமயன் சென்ற திக்கு நோக்கித்தொழுகின்றான். எம்பெருமானது தம்பியாய்ப் பிறந்தவர் பிழை செய்யக் கருதுவரோ?” என்று தன் உளத்தைத் தேற்றிக் கொண்டு பரதனைக் காணுமாறு ஓர் படகிலேறி அக்கரை சேர்ந்தான்.

இராமன்பால் இறவாத அன்பு பூண்ட இருவரும் ஒருவரை யொருவர் எதிர் நோக்கித் தொழுதார்கள். அன்பின் பெருக்கால் கங்கையரசன் பரதனது அடிகளில் வீழ்ந்து வணங்கினான். அவ்வன்பனைப் பரதன் ஆர்வத்தோடு எடுத்துத் தந்தையிலும் களிகூரத் தழுவினான். அப்போது குகன் பரதனை நோக்கி, “ஐயனே! இக்கோலத்தோடு நீ இங்கு வந்த காரணமென்னை?”,

என்று அன்பால் வினவினான். அதுகேட்ட பரதன், "ஐய! நேர்மை தவறாது இவ்வுலகினை அரசாண்ட என் தந்தையாகிய தசரதன் அரச முறையினின்றும் வழுவினான். அக்குறையை நிறை செய்யுமாறு கானகத்திலுறையும் காவலனை அழைத்துச் செல்லும் ஆர்வத்தால் இங்கு வந்தேன்" என்றான். அவ்வுரை கேட்ட குகன் அகமகிழ்ந்து புத்துயிர் பெற்றவன்போல எழுந்து பரதனது பாதம் பணிந்து, "ஐயனே!

தாயுரைகொண்டு தாதைஉதவிய தரணிதன்னை
தீவினையென்ன நீத்துச் சிந்தனை முகத்தில் தேக்கிப்
போயினை யென்றபோழ்து புகழினோய் தன்மை கண்டால்
ஆயிரம் இராமர் நின்கே ளாவரோ தெரியில் அம்மா"

என்று புகழ்ந்து போற்றினான். (தொடரும்)

## நீதித் திரட்டு.

73. வார்த்தைகள் பூமியின் பெண் குழந்தைகள், செய்கைகள் ஆண்மக்கள். 74. சோம்பேறித்தனம் ஓய்வல்ல; அது வேலை செய்வதைவிடக் கடினமானது. 75. நீ சம்சயிக்கும் ஒருவனை வேலைக்கு அமர்த்தாதே; அமர்த்திய பின்பு சம்சயிக்காதே. 76. பள்ளிக்கூடம் ஒன்றைத் திறந்து வைப்பவன் சிறைக்கூடமொன்றை அடைத்தவனாகின்றான். 77. முழங்கால் பணியும் கனவானைவிட நிமிர்ந்து நிற்கும் உழவன் மேம்பட்டவன். 78. உலகம் ஒரு முகம் பார்க்கும் கண்ணாடி; நீ சிரித்தால் அதுவும் சிரிக்கும், கோபித்தால் அதுவும் பதிலாகக் கோபிக்கும்.

# சகோதரத்வம்.

(கோட்டாறு, திருவாளர், எம். இ. நாயுடு எழுதியது)

## இந்துக்களே அருமைச் சகோதரர்களே!

சரித்திரத்தாலும் யூகத்தாலும் எட்டமுடியாத புராதன காலத்திலேயே நம் முன்னோர்கள் உயர்ந்த நாகரீகம் அடைந்திருந்தார்கள். நம் கிராமாந்திரங்களில் தற்காலம் நடத்தும் வாழ்க்கையை ரிக்வேத காலத்திலேயே, அதாவது 5000 வருஷங்களுக்கு முன்னுலேயே நாம் அடைந்திருந்தோம். 2300 வருஷங்களுக்கு முன் இந்தியாவிற்கு வந்து போன கிரேக்கனுகிய மகாஸ்தனன் இந்திய ஆண்களின் சௌரியத்தையும் சத்தியத்தையும், பெண்களின் கற்பு நிலையையும் வெகு விரிவாய் மெச்சி எழுதி இருக்கிறுர். சிலோன், பர்மா, சைனு, ஜப்பான், ஜாவா, எகிப்து, கிரீஸ் முதலிய இடங்களிலுங் கூட நமது கப்பல்கள் மூலமாய் நமது அறிவையும் நாகரீகத்தையும் பிரசாரம் செய்தோம். அந்தக்காலத்தில் ஐரோப்பா காட்டு மிராண்டிகள் வசித்த காடாயிருந்தது.

ஆனல் தற்போது நமது நிலை என்னவென்று ஆராய்வோம். நமக்கு பௌராவகாசம் (பிரஜாஉரிமை) இல்லையென்று அமெரிக்கர்கள் விரட்டுகிறுர்கள். அவர்கள் நாட்டைத் தொடக்கூடாதென்று ஆஸ்திரேலியர்கள் நாம் ஏறிய கப்பலையே அவர்கள் தேசத்தை அண்டவிடுகிறுர்களில்லை. 300, 400 வருஷங்களாய் நாம் குடியேறி நமது இரத்தம் சிந்தி உரமேற்றி மனேகரமான பூந்தோட்டங்களாய் மாற்றிய ஆபிரிக்காவில் அதிகாரம் பெற்ற வெள்ளையர்கள் நம்மை அடிமை ஜாதியாரென்றும், "எங்கள் வண்டியில் ஏருதே, எங்கள் தெருவில் இராதே, எங்கள் வியாபாரங்களைத் தொடாதே, கண்ணுக் கெட்டாத தூரம் நில்" என்று பல சட்டங்களால் நம்மை அவமானப்படுத்துகிறுர்கள். நாம் சமத்வம்வேண்டுமென்று வாதாடினுல், "ஏ! அடிமை, உன் முதுகின் துரும்பை நீ துடைத்தாயில்லை. உனக்கு மட்டும் அடிமைகள் வேண்டுமோ? எங்களுக்கு நீ அடிமையாகாயோ?" என்று ஏளனம் பண்ணுகிறுர்கள். மேலும், இந்த அடிமைத்

தனம் நமது மதக்கட்டளை என்பதாய்ச் சொல்லி நமது இந்து மதத்தையும் இழிவாய் எழுதியும் பேசியும் வருகின்றார்கள். என்னே நம்கதி! முற்காலத்தில் லௌகீகத்திலும் வைதீகத்திலும் முதல்வராய்ப் பிரகாசித்தோம். தற்காலத்தில் ஏளனத்திற்கிடமான தாழ்வடைந்தோம். இதைமாற்ற வழியில்லையா? பிரிய சகோதரர்களே! தயவுசெய்து ஆலோசியுங்கள்.

நான் இந்தியனென்று ஆண்மைகொண்ட எவரும் இதைச் சகியார். லௌகீகத்திலாயினும்சரி வைதீகத்திலாயினும்சரி, ஆண்மையற்றவன், உதவாதான், பேடி என்று தைரியத்தால் மனம்பொங்குங்கள். நான் அடிமையல்லேன், எனக்கும் அடிமைகள் வேண்டா. அடிமைகளுக்கு இன்று முதல் விடுதலை, என்று வீரபுருஷர்களாகிய இந்துக்கள் இன்றே முன் வாருங்கள். ''என்னைப்போன்ற மனிதனே, என்னைவிடப் பன்மடங்கு பொறுமையும் தன் மறுப்பும் ஆபரணமாய்க் கொண்ட உயர்ந்தோனே! நீ தீண்டாதவனன்று. எனது தீக்குணங்களாலும் ஆசையாலும் உன்னைத் தாழ்த்திய நானே தீண்டாதான். தெய்வம் என்னை மன்னிக்கட்டும்.'' என்று இன்றே பணிந்து சமத்துவத்தைக் கொடுப்போம். எல்லா வழிகளையும் கிராமங்களையும் கோவில்களையும் திறந்துவிடுவோம்.

ஆனால் இது மதத்துரோகம் என்பார் சில இந்துக்கள். இது உண்மைதானா? வேதகாலத்தில் ஜாதிகளாய்ப் பிரித்தாலும் தீண்டாமையும் உயர்வு தாழ்வும் இல்லாதிருந்தது என்று நம் வேதங்களை நன்றாய் ஆராய்ந்த வெபர், மாக்ஸ்முல்லர், ரோமேஸ் சந்திர தத்தர் முதலியோர் எழுதுகிறார்கள். தகப்பனறியாத ஜாபாலன் பிரமக்ஞானமடைந்து மகரிஷியானானென்று சந்தோக்கிய உபநிஷதம் கூறுகிறது. மகாபாரதத்தில் சாந்திபர்வத்தில் பிருகு பரத்வாஜருக்கு நடந்த தர்க்கத்தில்,

ந விசேஷோஸ்தி வர்ணானாம்
சர்வம் பிரமம் இதம் ஜகத்.
ஜாதிபேதமில்லை, உலகம் பிரம்ம சிருஷ்டி என்றுசொல்லி

பிரம்மணா பூர்வசிருஷ்டம் ஹி
கர்மணா வர்ணதாங்கதம்.

பிரம்மாவினால் சிருஷ்டிக்கப் பெற்று செய்கையினால் வர்ண பேதம் உண்டாயிற்று என்று கூறுகிறது. இன்னும் பின்னால்: கிருஷ்ண ஸௌசபரிப் பிரஷ்டா: தே த்வஜா; சூத்ராதாம் கதா; கறுத்த செய்கையாலும் அசுத்தத்தாலும் பிராமணனன் சூத்திரனாகிறானென்றும் முடிகிறது. மனுஸ்மிருதியில், பத்தாவது அத்தியாயத்தில் 65-வது ஸ்லோகத்தில் சூத்திரன் பிராமணனாகவும், பிராமணன் சூத்திரனாகவும் மாறலாமென்று காண்கிறது. இன்னும் பல்லாயிர அத்தாக்ஷிகளை அடுக்கலாம். ஆனால் நம் மத நூல்களில் இதற்கு நேர் விரோதமான அதிகாரங்களையும் எடுத்துக் காட்ட வழியுண்டு என்று நான் அறிவேன். ஆனால் முக்கியமான நம் மத நூல்களில் ஜென்மத்தினால் பேதமில்லையென்றே நாம் காண்கிறோம். கணிகாபுத்திரராகிய வசிஷ்டர் (கணிகை—தாசி) சுவபாகி புத்திரராகிய பராசரர் (சுவபாகி—சண்டாளி) கைவர்த்தி புத்திரராகிய வியாசர் (கைவர்த்தி—செம்படவ ஸ்திரி) முதலியோர் பிரம்மரிஷிகள் ஆனார்கள் என்பதே போதுமான உதாரணங்கள்.

யுக்திக்கும் பிரத்தியக்ஷத்திற்கும் விரோதமானதை ஆதாரமாகக் கொள்வது நியாய விரோதமென்று நாம் அறிவோம். சமீபகாலத்தில் புற மதங்களைச் சார்ந்த சாம்பவ சகோதரர்கள் (பறையர்கள்) மகம்மதிய மௌல்விகளாகவும் கிறிஸ்தவ பாதிரிகளாகவும் புத்தியில் சிறந்த உத்தியோகஸ்தர்களாகவும் விளங்கி நம்மில் ஜாதி இறுமாப்புக் கொண்ட பிராமணவைதிகனும் கூட 'எஜமானே' என்று அழைக்கும்படியாகவும் உயரவில்லையா?

தொழிலினால் நீசன் என்றால் அதைவிட நீசமான பஞ்சமா பாதகங்களைச்செய்வோனை என்னென்று அழைப்பது? கள்ள சத்தியம், பொறாமை, பலாத்காரப் புணர்ச்சி, கள்வெறி முதலியவே பிறவிக் குணமாய்க் கொண்ட சிலரை உயர்ந்த ஜாதி என்று மதித்து பொறுமை, பரோபகாரம், சத்தியம், கற்பு நிறைந்த ஏழைச் சகோதரனை தீண்டாதாவென்று விரட்டும் மதமும் உண்டோ? இதுவோ நாம் போற்றும் இந்து மதம்! ஒரு நாளுமில்லை.

சத்தியமே பரம மதம்; சத்தியத்தை மிஞ்சிய தர்மமில்லை; எக்கொள்கை உடையவனுகினும் ஈசனையே பூசிக்கின்ருனென்றும், பல்லாயிர நூல்களால் போதிக்கப் பெற்ற இந்துமதம், "ஏ! பறையா எந்த மதத்தைச் சார்ந்தாலும் இந்து மதத்தைச் சேராதே" என்று விரட்டுமோ? நம்மால் இம்சிக்கப் பட்டாலும் விரட்டப்பட்டாலும் அந்த சாம்பவ சகோதரன் இந்து மதத்தை விட்டு அகலமாட்டேனென்று தைரியமாய் நிற்கின்ருன். இவனே உண்மை இந்து மத பக்தன், நாமல்ல.

சகோதரர்களே! கிறிஸ்தவர்களும் மகம்மதியர்களும் அவர்களைக் கூவி அழைக்கின்ருர்கள். அவர்களைச் சர்வ ஸ்வாதந்திரியமாய் நம்மோடு சேர்த்துக்கொள்ளாவிட்டால் சிறிது காலத்திற்குள் புற மதங்களைச் சேர்ந்து இந்தியாவில் $7\frac{1}{2}$ கோடி பலமுடையவர்களாய் அவர்களை விரட்டிய இந்து மதத்திற்கும் சமூகத்திற்கும் பஹிரங்க விரோதிகளாய்ப் பிரகாசிப்பார்கள். அவர்களை சகோதரர்களாய் மதித்து சுவாதந்திரம் கொடாவிட்டால் இந்து மதத்திற்கும் சமூகத்திற்கும் இழிவு என்பதற்குச் சந்தேகமில்லை. நாம் செய்ய வேண்டுவது என்னவென்ருல், "சகோதரா, நீ என்னைப் போன்றவன். என் உரிமைகள் உன்னுடையவைகளே" என்று பறைசாற்றி இன்றுதானே எல்லா வழிகளிலேயும் எல்லாக் குளங்களிலேயும் எல்லாக் கோவில்களிலேயும் அழைத்துச்சென்று லௌகிக ஞானத்தையும் வைதீக ஞானத்தையும் போதித்து சம உரிமையையும் கொடுக்கவேண்டும். இதுவே நம் மதம் நமக்குக் கற்பிக்கும் சகோதரத்வம், இதுவே நமது வாழ்க்கையின் எதிர்காலத்திற் கேற்ற உபாயம். இதுவே இந்து சமூகத்தின் ஒற்றுமைக்கு உற்ற வழி. இது செய்யாவிட்டால் நாமும் நமது சமூகமும் நமது சர்வ சுவாதந்திரிய ஹிந்து மதமும் பலம் குன்றி இழிவடையும். இதற்குச் சந்தேகமில்லை. இவைகளை நன்ருய்க் கவனித்து நேர் வழி நடக்க மிகப் பணிவுடன் கெஞ்சிக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

# ஸ்ரீ சுப்பிரமணிய சிவத்தின் ஜீவிய சரித்திரம்.

(முன் ஈடுஉ-ம் பக்கத் தொடர்)

"தேசபக்தன்" எழுதியது.



ஸ்ரீ. சிவா.

இவர் விளையாடச் செல்வதில்லை. உண்டு உறங்கும் சமயம் தவிர, மற்ற சமயமெல்லாம் பரமசிவ பூஜைதான். இவர் சரீரமெல்லாம் திருநீறணிந்து அந்த மரப்பாவைக்கு முன்னே யுட்கார்ந்துகொண்டு பூஜை செய்வதை ஒரு ஆச்சரியமாக அந்த கிராமத்து ஜனங்கள் பலரும் தினந்தோறும் வந்து பார்த்துப் போவார்கள். இவருடைய எ-ம் வயது வரையில் இவர் இம்மாதிரி செய்துவந்ததாகக் கேள்வி. இவருடைய பாட்டனார், ஒரு பெரிய வேதாந்தியாயிருந்த படியினால், எப்பொழுதும் இவருக்கு இராமயண, பாரத, பகவத் கதைகளை யெல்லாம் சொல்லிக் கொண்டே யிருப்பார். குழந்தைப் பருவத்திலே இவர் மிகவும்

பயந்த ஸ்வபாவமுடையவராயிருந்தா ரென்று தெரிகிறது. இவருடைய பாட்டனார் தொண்டு கிழவராய்விட்ட படியால் அந்த கிராம முனிசிபு வேலையை அவருக்குப் பதிலாக இவருடைய தகப்பனார் கொஞ்ச காலம் பார்த்து வந்தார். பின்னர் இவருடைய 9-ம் வயதில் கிரமப்படி உபநயனமாயிற்று. இவருடைய படிப்பை யுத்தேசித்து, இனிமேல் கிராமாந்தரங்களில் இருக்கக் கூடாதென்று தீர்மானித்து, இவருடைய பெற்றோர் மதுரைக்கு வந்து சேர்ந்தார்கள். அங்கே இவர் கட்டுசெட்டி மண்டபத்திலும் ஸேதுபதி ஹைஸ்கூலிலுமாகப் படித்துவந்தார். இதற்குள்ளாக இவருடைய குடும்பம் மேலும் மேலும் வறுமை மிகுந்து, மிகவும் கஷ்டப்பட வேண்டி வந்துவிட்டது. இதனால் இவருடைய பெற்றோர் திருவனந்தபுரம் போகவேண்டி நேர்ந்தது. அங்கேதான் இவருடைய குழந்தைக் குணங்களெல்லாம் மாறத் தலைப்பட்டன.

திருவனத்தபுரத்தில் 'ஊட்டுப் புறைகள்' என்ற தர்ம சத்திரங்கள் உண்டு. பிராமணர் எவருக்கும் இரண்டு வேளையும் எத்தனை தடவை வேண்டுமானாலும் அன்னம் தானம் செய்யப்பட்டு வந்தது. ஆதலால் பிராமணர்களுக்கு அங்கு காலக்ஷேபத்துக்கு அதிகக் கவலை யில்லை. ஆகையால் சென்னை ராஜதானியின் நாலாபக்கங்களி லிருந்தும் வறுமை மேலிட்ட பிராமணர்கள் அங்குவந்து குவிந்து கொள்வது வழக்கம். அங்கே டவுண் ஹைஸ்கூலிலும், நேடிவ் ஹைஸ்கூலிலும் சிவம் படித்து வந்தார். குழந்தைமுதற் கொண்டே இலக்கியப் படிப்பில் இவருக்குப் பிரீதியும் திறமையும் மிகுதியாக உண்டு. கணித சாஸ்திரம் மட்டும் இவருடைய மூளையில் நுழையாது. இவர் பள்ளிக்கூடத்திலே சங்கங்கள் ஏற்படுத்தி, கார்யதரிசியாகவும் இருந்து வந்தார். இவருக்கு இயற்கையிலே அமைந்திருந்த மதப் பற்று அதிகரித்துக் கொண்டே வந்தது. பல பக்தர்களைக் கொண்டு பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் பிரசங்கங்கள் செய்வித்தும் பாட்டங்கள் சொல்லச் சொல்லியும் இவர் கேட்டுவந்தார்.

1399-ல் இவருக்கு விவாகமாயிற்று. இவர் பள்ளியில் படிக்கும் காலத்தில் இவருடைய இலக்கிய அறிவின் விசேஷத்

தைப் பாராட்டி இவருக்குப் பல தடவைகளில் பரிசுகள் கொடுக்கப் பட்டன. ஆசிரியர்கள் பலர் இவரைப் பல விதமாக மெச்சியுள்ளார்கள். வரவர இவருடைய பழைய பயந்த ஸ்வபாவம் மாறத் தொடங்கி விட்டது. 1900–ம் வருஷத்திலே இவர் கோயமுத்தூரில் சென்று ஒரு வருஷம் அங்கு படிக்கும் படி நேர்ந்தது. அப்பொழுதுதான் இவருடைய உள்ளத்திலே தேசாபிமானம் தானுகவே பூக்கத் தொடங்கிற்று. அச் சமயத்தில் நடந்து கொண்டிருந்த போயர் யுத்தத்தில் போயர்கள் காட்டிய வீரச் செயலை மெச்சி ஆங்கிலத்தில் பல கவிகள் கட்டினர். அவை இப்பொழுது கிடைக்கவில்லை. வரவர இவருக்கு விளையாட்டுப் புத்தி மலிந்து, சேஷ்டை குணம் மிகுந்து விட்டது. பள்ளிக்கூடத்துக்குச் சென்றால் எப்பொழுதும் ஏதேனும் சேஷ்டைகள் செய்து கொண்டேயிருப்பார். உபாத்தியாயர்கள் இவரைக் கண்டால் வெறுப்பார்கள்; சில சமயங்களிலே பயப்படவும் செய்வார்கள். குறுகிய பார்வை யுடையவரான கணிதசாஸ்திரப் பண்டிதர் ஒருவர் தினந்தோறும் இவரிடம் பட்ட பாட்டைச் சொல்லி முடியாது; சில சமயங்களில் கண்ணீர் விட்டு அழுதும் விடுவார். இவர் நல்ல சரீரக்கட்டு வாய்ந்தவராயும் இருந்தார். ஒரு நாள் இவருடைய சேஷ்டைகளைப் பொறுக்க முடியாமல், ஆங்கிலப்பாஷைப் பண்டிதர் இவருக்குப் பிரம்பினால் ஆறு அடி தண்டனை விதித்து, கையை நீட்டச் சொல்லி அடித்தார். இவர் மூன்று அடி பொறுத்துக்கொண்டார். அதற்கு மேல் பொறுக்க முடியவில்லை யாகையினால், நான்காவது அடி கையில் விழுந்தவுடன் அப்படியேபிரம்பைப்பலமாகப் பிடித்துக் கொண்டு விட்டார். உபாத்தியாயர் எங்கே இவர் தம்மைத் திருப்பி யடித்து விடுவாரோ வென்று பயந்து, நாற்காலியினின்றும் எழுந்திருந்து தலைமை உபாத்தியாயருடைய அறைக்கு ஓடிப்போய்விட்டார். பிள்ளைகளெல்லோரும் சிரித்தார்கள். இவர் பிரம்பை மேஜையின்மேல் வைத்துவிட்டு, தமது இடத்தில்போய் உட்கார்ந்துகொண்டார். தலைமை உபாத்தியாயர் வந்து இவரைக் கூப்பிட்டு, "நீ ஏன் உபாத்தியாயரை அடிக்கப்போனுய்?" என்றுகேட்க, இவர் "நான் அடிக்க எண்ணவேயில்லை; வலி பொறுக்க முடியாமல் பிரம்பைப் பிடித்துக்கொண்டேன். உபாத்தியாயர் பயந்து ஓடிவிட்டார். அதற்கு நான்

என் செய்வது?" என்று பதிலுரைத்தார். தலைமை உபாத்தியாயர் இவருக்குச் சில புத்திமதிகளைச் சொல்லிவிட்டுப் போனார்.

கேட்ட கேள்விக்கு எந்தப் பையனாவது சரியானபடி மறுமொழி சொல்லாவிட்டால், அந்த ஆங்கில பாஷைப் பண்டிதர், "What I want is common sense—அதாவது, எனக்குவேண்டுவது சாதாரண அறிவு" என்று அடிக்கடி சொல்லுவார். இவர் ஒரு நாள் ஏதோ ஒரு கேள்விக்கு மறுமொழி சரியாகக் கூறவில்லை. ஆங்கில பாஷைப் பண்டிதர், "What I want is common sense" என்றார். இவர், "Exactly so, Sir" (அதாவது, ஆமாம், அப்படித்தான் ஐயா) என்றார். 'எனக்கு வேண்டுவது சாதாரண அறிவு' என்று அப்பண்டிதர் தம்மையே நோக்கிச் சொல்லிக் கொண்டதுபோல் பொருள்படும்படி மறுமொழியுரைத்துவிட்டார். பிள்ளைகள் கைகொட்டிச் சிரித்தார்கள். பண்டிதர் தலை குனிந்தார்.

பிராமணர்கள் மீசை வைத்துக்கொள்ளுவதில்லை யாயினும், கோயம்புத்தூர் ஜில்லாவிலே பிராமணர்களிற் சிலர் மீசை வைத்துக்கொள்ளுகிறார்கள். இவருக்கு சுபேச்சை யுண்டாகிவிட்டது. பந்துக்களெல்லோரும் ஆக்ஷேபித்தும் அந்த ஆக்ஷேபனைகளைப் பொருட்படுத்தாது இவர் மீசை வைத்துக்கொண்டார். பள்ளிக்கூடத்தில் கோடைகால விடுமுறை விடப்பட்டபொழுது, இவருடைய தாயார் திண்டுக்கல்லில் தமது நமயனுருடைய கிரகத்துக்கு வந்திருந்ததினால் இவர் அங்கு வந்தார். இங்கேதான் இவருடைய வாழ்க்கையிலே பெரியதொரு மாறுதல் ஏற்படுவதற்கு ஓர் பெருங்காரண முண்டாயிற்று.

இவருடைய ஒன்றுவிட்ட மாமனொருவர் அதிபாலியத்திலேயே பித்துப் பிடித்தவர் போலாய்விட்டார். அவருக்கு மாந்திரீகர்களைக் கொண்டும் வைத்தியர்களைக்கொண்டும் பலவித சிகிச்சைகள் செய்யப்பட்டும், ஒன்றும் பயன்படாமற் போகவே, அவரை வெளியே விட்டுவிட்டார்கள். அவர் எங்கோ போய்விட்டார். இருபத்தைந்து வருஷங்களுக்குப்பின் அவர் திண்டுக்கல்லிலே மறுபடியும் தோன்றினர்; பித்தனைப் போலவேதான் கௌபீனங்கூட யில்லாமல் அவர் காணப்பட்டார். அவரை ஒருவரும் கவனியாதிருந்துவிட்டார்கள். ஆனால் வாவாத் தாழ்ந்த

வகுப்பாரெனப்படும் ஜனங்களுக்குள்ளே அவரைப் பற்றிய உண்மை ஏதோ வெளிப்பட ஆரம்பித்துவிட்டது. மெல்ல மெல்ல பிராமணர் தவிர மற்ற ஜாதியார் அனைவரும் அவரைக் கொண் டாடத் தொடங்கினார்கள். அவரோ ஜனங்களுடன் சரியாக உரையாடமாட்டார். ஒன்று கேட்டால் அவர் ஒன்றுசொல்வார். காலியாப் போய்க்கொண்டிருக்கும் வண்டியிலே, குடுகுடு என்று ஓடித் தாமே ஏறியுட்கார்ந்து கொள்வார். அந்த வண்டிக்காரன் பேசாமலிருந்துவிட்டால், தாமே சீக்கிரத்தில் கீழே இறங்கிப் போய்விடுவார். அன்று அந்த வண்டிக்காரனுக்கு நல்ல ஊதியம் கிடைக்கும். அவன் அவரைக் கழுத்தைப் பிடித்துத் தள்ளி வண்டியினின்றும் வெளியேற்று வானானால், அன்று அவனுக்கு ஒரு சவாரிகூடக் கிடையாது. இதேமாதிரி கடைத் தெருவிலே பழமோ, கற்கண்டோ தமக்கு இஷ்டப்பட்ட எதையும் தாராள மாக எடுத்து அங்கு கூடும் பிள்ளைகளுக்கு எறிந்துவிடுவார். கடைக்காரன் சும்மாவிருந்துவிட்டால், அவனுக்கு அன்று ஏரா ளமான லாபம் கிடைக்கும். அவன் தடுத்துத் தாறுமாறு செய் வானானால் அவனுக்கு அன்று வியாபாரமே யாகாது. ஆனால் எவரேனும் வலிய வருந்திக் கூப்பிட்டால், செல்லமாட்டார். தாமே இஷ்டப் பட்டால்தான் சொல்வார். அவரிடத்தில் இந்த நம்பிக்கை பொது ஜனங்களுக்கு உதித்துவிட்டது. அவர் அவ தூதராய், திகம்பர ராயிருந்தார். எச்சிலையில் நாய்கள் தின்று கொண்டிருந்தால் இவரும் அருகே போய் உட்கார்ந்து, அந்த நாய்களைத் தடவிக் கொடுத்துக் கொண்டே, அந்த எச்சிலையில் தாமும் உண்பார். இவர் உறங்கியதை எவருமே பார்த்ததில்லை. இவருடைய செய்கைகளெல்லாம் லீலைகளாகவே யிருந்தன. இவருக்கு சகல ஜாதிகளிலும் சகல மதங்களிலும் சிஷ்யர்கள் உண்டு.

(தொடரும்)

## தென்னிந்தியச் சிற்பம்.

(௱௪௮-ம் பக்கத் தொடர்)

தஞ்சைக் கோட்டையைப் பார்த்த ஒருவனுக்கு, கோட்டையின் அமைப்பும், அதனை அங்ஙனம் அமைக்க உதவின கைத்தொ ழிலாளர் திறனும் தென்தேச அரசர்களின் மகோன்னத பெருமையை

வெளிப்படுத்தாமலிரா. தஞ்சைக் கோவிலை புராதன ஆராய்ச்சியின் பொது நோக்கோடு உற்றுநோக்கினால் அதுபூர்வம் சமணருடைய சிற்பத் திறத்தினை விளக்குகின்றது. ஆயினும் தஞ்சைக் கோவிலிலுள்ள பெரிய நந்தியை கோவில் கட்டிய வெகு காலத்திற்குப் பின்புதான் ஸ்தாபித்திருக்கவேண்டுமென்று சிலர்அபிப்பிராயப் படுகின்றனர். சமணரைவாதில் வென்ற திருஞான சம்பந்த சுவாமிகள் காலத்தில்தான் அது நிர்மாணிக்கப்பட்டிருக்க வேண்டும் என்றும், மூலஸ்தானம், கெற்பக்கிரகம் முதலியனசைவாகமப்படிகட்டப்படவில்லை யென்றும், கோபுரம் சமணருடைய சிற்ப ஒழுங்கையே பெரிதும் காட்டுகிறதென்றும் ஒரு சில மாறுதல்களே பின் காலத்தில் செய்யப்பட்டிருக்கின்றன என்றும், ஆராய்சியாளர்கள் பெரிதும் கருதுகின்றனர். சிதம்பரம், திருவாரூர், முதலிய சைவக்ஷேத்திரங்களில் அமைந்தகோவில் நிர்மாணங்கள் சைவாகமத்தைப் பெரிதும் தழுவியிருக்க, தஞ்சைக் கோவில் நிர்மாணம் அங்ஙன மில்லாததினால்தான் இத்தகையஆசங்கைகள் ஆராய்ச்சியாளர் மனதில்எழுந்தன போலும். இவ்வாராய்ச்சியைப் பற்றி யாமொன்றும் கூறுவதற்கில்லை. இது அறிஞரின் ஆராய்ச்சிக்கே விடப்படவேண்டும்.

தென்னாட்டில், சிற்பத்திறன் விளங்கும் க்ஷேத்திரங்களில் ராமேஸ்வரம் ஒன்று. ராமேஸ்வரத்தை நோக்குங்கால் அதனிடம் அமைந்த கல்வேலைத்திறனும் விக்கிரக நிர்மாணமும் வைஷ்ணவராலும் சைவர்களாலும் ஒருங்கே போற்றப்படுகின்றன. ஸ்ரீரெங்கம் ஏழுமதில்களும் அங்கு பள்ளிகொண்டிருக்கும் ஸ்ரீரெங்கநாதனின் சிலையும், கருடவாஹன நிர்மாணமும் தென்தேயச் சிற்பியின் மனப்போக்கைத்தெள்ளிதில் விளக்குவனவாகும். இன்னும் மதுரையிலுள்ள மீனாம்பிகை ஆலயமும், சொக்கேசர் ஆலயமும் அங்குள்ள நான்குகோபுரங்களும் அதனுள்நிரப்பியிருக்கும் சிலா விக்கிரக நிர்மாணங்களும் தென்தேயச் சிற்பியின் திறத்தைச் செவ்வனே விளக்கி, கண்டோர் மனதை களிக்கச்செய்யும். பின்னர் நாயக்கர் காலத்தில் கட்டப்பட்ட திருமலைநாயக்கர் மகாலும், புதுமண்டபமும், மதுரை காணச்சென்ற ஒவ்வொருவரது மனத்திலும் என்றும் நிலவும். இம்மட்டோ! தென்பாண்டிநாட்டு மக்கள் திருநெல்வேலிஜில்லாவிலுள்ள கழுகுமலை, கிருஷ்ணாபுரம், தென்காசி, திருநெல்வேலி முதலிய க்ஷேத்திரங்களிலுள்ள கோவில்களிலுள்ள சிலா நிர்மாணங்களைப் பொன்னேபோல் போற்றி மகிழ்வடையலாம். நெல்லைநகருக்கு அணித்தாயுள்ள கிருஷ்ணாபுரத்திலுள்ள விஷ்ணு கோவிலைப்போய்ப் பார்கக நாம் ஒவ்வொருவரும் கடமைப்பட்டிருக்கிறோம். அங்குள்ள சிலைகளின் நுண்ணுக்க வேலைத்திறனும், யாதொரு பற்றுக்கோடுமில்லாமல் செதுக்கப்பட்டிருக்கும் சிலைகளின் அழகும், மிருகங்களின் வனப்பும், செடிகொடிகளின் இயற்கைத்தோற்றமும் பார்த்தால் இந்தியச் சிற்பத்திற்குள்ள ஒப்பற்ற சிறப்பு நாம் என்றும் மறக்லொணாததோர் பொக்கிஷமாய் விளங்கு

மென்பதில் தடையுமுண்டோ? தென்காசியிலும், திருநெல்வேலி சுவாமி கோவில் முன்மண்டபங்களிலும் நிறுத்தப்பட்டிருக்கும் சிலைகளின் வனப்பும் நம் பூர்வசிற்பிகளின் திறத்தைச் செவ்வனே விளக்குவனவாகும். அவர்களறிந்த அளவு, அங்க நிர்மாண சாஸ்திரத்தை இன்னும் மேல்நாட்டாரால் கற்கமுடியவில்லை யென்றால் அவர்தம் திறனை என்னென்பது!

நம் தென்னிந்தியச் சிற்பிகள் கற்சிற்பத்தில் மட்டுமல்ல, மரச்சிற்பத்திலும் கைதேர்ந்த நிபுணராய் விளங்கினதாலன்றோ, நுணுக்கவேலைப்பாடமைந்த தேர் முதலியவற்றைச் செய்துமுடித்திருக்கின்றார்கள். இம்மட்டோ? உலோகச் சிற்பத்திலும் இந்தியர் பின்வாங்கினவரல்லர். தென்னிந்திய கோவில்களில் காணும் விக்கிரகங்களும், அவைகளுக்கு ஏற்பட்டுள்ள உற்சவ வாகனங்களும், இன்னும் இந்தியரின் உலோகச்சிற்பத்தின் நுணுக்கத்தையும், பெற்றியையும் பெரிதும் விளக்குவனவாகும். அதோடு மேல்நாட்டார் பலநாள் வருந்திக் கண்டுபிடித்ததாகக் கூறும் ஒரு உலோகத்தை மற்றொரு உலோகத்தோடு இணைக்கும் தன்மை, நம் பூர்வமக்கள் இன்றைக்குப் பன்னூறு யாண்டுகளுக்குமுன்பே அறிந்திருந்தனர் என்று கூறுவது ஒரு சிறிதும் மிகையாகாது.

இத்துடனமையாது, நம் புராதன சித்திரீகர்கள் பலகைச் சிற்பத்திலும் கைதேர்ந்தவர்களாய் இருந்திருக்கின்றனர். பல கோவில்களில் புராணக் கதைகளை சுவர்களில் தீட்டி பாமரரும் பெண்டிருங்கூட தம்மத இயல்புகளை அறியச்செய்திருக்கிறார்கள். அவைகளை அமைத்தலில் இந்திய மரச்சிற்பிகளின் நுணுக்க வேலைத்திறனும், உயரிய கருத்துக்களும் ஒருங்கே விளங்கும். தற்கால பலகைச்சிற்பத்தில் உலகத்துள் பேர் பெற்ற இத்தாலியரும் கலாவதியில இயற்கையாய் உள்ளவாறு எழுதிக் கற்றுக்கொண்டார்களே அல்லாமல், பூர்வம் அவர்கள் பலகைச்சிற்பம் இந்தியரின் பலகைச் சிற்பத்திற்கு எத்துணையும் மேம்பாடுடைய தல்லவென்றே மேல்நாட்டாசிரியர் பலரும் கூறுகின்றனர்.

இத்தகைய பலவகைச் சிற்பங்களில், கற்சிற்பம், உலோகச்சிற்பம், மரச்சிற்பம் முதலியவைகளில் இந்தியர்களே முன்னணியில் நின்றார்கள். ஆனால் பலகைச் சிற்பத்துள்மட்டும் அத்தகைய மேம்பாடுற்றிருந்தார்கள் அல்லர். பலகைச்சிற்பமோ, சுவர்ச்சிற்பமாயும், துணிச்சிற்பமாயும், காகிதச் சிற்பமாயும் பிரகாசித்தது. இத்தகைய காகிதச்சிற்பத்தில் மேல் நாட்டார் மேலெறினர். மற்றச்சிற்பத்துள் தமக்கு ஒருவரும் நிகரில்லாமல் செய்துகொண்ட, இந்தியச் சிற்பிகள் இதனை கையாளாதுவிட்டது, பலகைச் சிற்பம் அதிககாலம் நீடித்திராது என்ற எண்ணங்கொண்டே போலும். அந்த ஒரு குறையையும் நிவர்த்திக்கவே பல இந்திய மாணவர்கள் முன்வந்தார்கள். மேல்நாட்டார் முறைகளைக் கற்றார்கள். அவர்

களையும் வெற்றிபெற்றார்கள். என்னே! அரசகுடும்பத்தில் பிறந்து, வளர்ந்து சிற்பத்தையே தனக்குற்ற ஓர் அருங் கலனாகக்கொண்ட ராஜா ரவிவர்மாவென்ன! அபேந்திரநாததாகூர் என்ன! இவர்களின் திறமையாலேதான் இந்தியமக்கள் பலகைச் சிற்பத்திலும் ஒருவருக்கும் தாழ்ந்தவரல்லர் என்பதை நிரூபித்தனர். இவ்வாறு சித்திரக் கலையின் பலதுறைகளிலும் இந்திய மக்களே முன்னணியில் நின்றனர் என்பது வெளிப்படை. இதுவரை யான் கூறியவற்றால், நம்பூர்வமக்கள், நெடுநாள் நிலை கொள்வனவாய் அரும் பெரும் நிர்மாணங்களை நம் நாடு முழுதும் நாட்டினார் என்பதும், அவைகளுள் கற்சிற்பம், உலோகச் சிற்பம், மரச் சிற்பம் முதலியன உலகில் அறிவுடையாரும், அபேதமில்லாது ஒப்புநோக்கும் பெரியார் பலரும் சிலாகிக்கிறார்கள் என்பதாம். பலகைச் சிற்பமும் நாளடைவில் இந்தியச் சிற்பிகளால் செவ்வனே செய்யப்பட்டு உயர்வான நிலையையே தற்காலம் அடைந்திருக்கிறதென்பதும் விளக்கமுறும். இங்ஙனமாக, இந்தியர்களாகிய நாம் எத்தொழிலைக் கைக்கொண்டாலும், அதனை முட்டின்றி முடித்து, சரிவரச் செய்து பெரும் புகழீட்டும்தன்மை நம்மிடத்தில் இயற்கையிலேயே அமைந்து கிடக்கிறதென்பதைநான் கூறவேண்டுவதில்லை.

“தோன்றிற் புகழொடு தோன்றுக, அஃதிலார்
தோன்றலிற் தோன்றாமை நன்று”

என்ற வள்ளுவர் திருமொழி, நமக்காக எழுந்த மொழியேயாம்.

ஆதலால் இந்திய மக்களாகிய நாம், நம் பூர்வமூதாதைகள் கையாண்ட தொழிலின் முறைகளையும் அவர்களின் ஜன நிர்மாணங்களையும், அவைகளில் காட்டிய திறனையும், பேறிவையும் போற்றிவர வேண்டும். தற்காலம், மேல்நாடுகளெல்லாம் கைத்தொழில் விசேடத்தாலும் வியாபார முறையாலும் மேன்மைபெற்று விளங்குவது நாமறிந்த உண்மையேயாகும். அதுபோலவே மனிதவர்க்கப் பகுப்பினுள் அடங்கிய நாமும் தற்கால முற்போக்கை யுன்னி “எத்தொழிலைச் செய்தாலும் ஏதவத்தைப் பட்டாலும் சித்தர் மனமிருக்கும் மோனத்தே” என்பதொப்ப காரியத்தில் கண்ணாயிருந்து, வெற்றிபெறவேண்டும். நம்முயற்சியால் நம் நாடு செழித்து, கல்வியறிவிலும், கைத்தொழில் விர்த்தியிலும் பிறநாட்டாரிலும் நாம் தாழ்ந்தவரல்லர் என்பதை நாம் ஒவ்வொருவரும் உணர எல்லாம் வல்ல பரமன் அருள் புரிவானாக. சுபம்.

(ஸ்ரீ தோ. மு. பா.)

# மகாத்மா காந்தியின் மணிமொழிகள்.

திருவாளர் பே. திருகூடசுந்தரம்பிள்ளை, எம். ஏ., பி. எல்.
மொழி பெயர்த்தது.

௫௨. குர் ஆன், பைபிள், ஜென்ட் அவஸ்தா, தால்மூத், பகவத்கீதை—எதைப் படித்து அறிய விரும்பினாலும் நம் அனைவருக்கும் கடவுள் ஒருவரே. அவர் உண்மைக்கும் அன்பிற்கும் அதிபதி. இவ்விஷயத்தில் எனக்குள்ள நம்பிக்கையை நிரூபிப்பதன்றி என் வாழ்க்கையின் நோக்கம் வேறில்லை.

௫௩. கடவுள் செயல்கள் ஆராய்ந்து அறியக்கூடியனவல்ல. அவர் பக்தர்களுக்குப் பலவித துன்பங் கொடுத்து அவர்களைப் பலமுறை சோதிப்பார்.

௫௪. ஒருவன் தன் எதிரிக்குத் துன்பஞ்செய்தவன் மூலமாகவன்றி தனக்குத் துன்பத்தைத் தேடிக்கொள்வதன் மூலமாக உண்மையை நிலைநாட்டுவதே சத்யாக்ரகம் எனப்படும்.

௫௫. சத்யாக்ரகம் என்பவற்கு உண்மையைக் கடைப்பிடித்தல் என்பது பதப் பொருள். அதாவது உண்மை சக்தி என்பது அதன் பொருள். உண்மை யென்பது ஆன்மாவாகும். ஆகையின் அது ஆன்ம சக்தி என்று வழங்கப்பெறும். மனிதன் உண்மை முழுவதையும் அறியமுடியாததனால் தண்டிப்பதற்கு அதிகாரமில்லாதவன். ஆகையால் சத்யாக்ரசத்தில் ஹிம்சைக்கு இடமில்லை.

௫௬. ஆன்மசக்தியை உபயோகிப்பவர், மிருகபலத்தை உபயோகிப்பவர், இருவரும் போர்வீரர்களே. பின்னவர் ஆயுதம் இழந்த வழி அபஜயமுற்றதாக ஒப்புக் கொள்வர்; முன்னவர் அபஜயம் என்பதையே அறியார்.

௫௭. ஆயுதபாணியான போர்வீரன் யமனைத் தன் தோழனாகத் தன்னருகில் வைத்திருப்பான். ஆகையால் அவனும் சத்யாக்ரகியாவான் என்று நம்ப இடமுண்டு.

௫௮ அரசாங்க விதிகள் நீதியானவையா, அநீதியானவையா என்பதைப்பற்றி ஜனங்களுக்குள் அபிப்பிராய பேதமுண்டு. அதுதான் சத்யாக்ரகி பலாத்காரம் உபயோகிக்கக் கூடாது என்பதற்கு முக்கிய காரணம். தனக்குள்ள சுதந்திரம் எதிரிக்கும் உண்டென ஒப்புக்கொண்டு, அவனுக்கு யாதொரு தீங்கும் செய்யாது அவனை எதிர்க்கவேண்டும்.

# விமரிசனம்.

ஹரிஸமய திவாகரம்:- மாஸிகை. ஆசிரியர் ஸ்ரீபண்டித் ஆ. அரங்க ராமானுஜன். வருட சந்தா, உள்நாடு ரூ 2—0—0 வெளிநாடு ரூ. 2—4—0. 239, ஹரிஸமயதிவாகரம் ஆபீஸ், தெற்கு மாரட்டுத் தெரு, மதுரை.

இதன் மூன்றாந் தொகுதியின், 10, 11-வது இதழ்கள் வரப் பெற்றோம். ஸ்ரீவைஷ்ணவத்தின் பெருமை, திவ்யஸூரி சரிதை, குழமணி தூரம், இல்லறத்தின் சிறப்பு முதலிய அரும் பெரும் கட்டுரைகள இவற்றில் வரையப் பட்டுள்ளன. குன்றியொளிரும் ஸ்ரீவைஷ்ணவர்களின் வளர்ச்சிக்கு இத்தகைய பத்திரிகைகள் பல இன்றியமையா. சமய உணர்ச்சி ததும்பும் விளக்கமான சுவையுடைய கட்டுரைகளுடன் வெளிவந்து உலாவும் 'திவாகரம்' பெயருக்கேற்ப நம் களங்கந்துடைத்து ஒளியளிக்குமாறு, வைணவப் பெருமக்கள் அனைவரும் சந்தாதாராய்ச் சேர்ந்து உதவவேண்டுகின்றோம்.

வைத்திய சந்திரிகா:- மாஸிகை. ஆசிரியர் ஸ்ரீ எஸ். நாராயண அய்யரவர்கள். வருட சந்தா உள் நாடு ரூ, 2—0—0 வெளிநாடு ரூ. 3—0—0. வைத்திய சந்திரிகா ஆபீஸ், கரூர்.

இதன் இரண்டாம் புத்தகத்தின் 3, 4-வது இதழ்கள் வரப் பெற்றோம். சுதேச வைத்தியத்தின் பெருமையையும் முறைகளையும், நிகழ்கால நிலைமையும், முன்னேற்ற வழிகளையும் பற்றிப் பல இனிய வியாசங்கள் இதன்கண் விளங்குகின்றன. 'நாட்டு வைத்தியம் நலமற்றது' என்று அறியாது கூறுபவர் 'சந்திரிகா'வைப் படித்தால் உண்மை அறிவார். நமது பண்டை சிகித்சை முறைகளும், வைத்ய சாஸ்திரங்களையும் பற்றிய கட்டுரைகளையும் சொற்பொழிவுகளையும் 'சந்திரிகா'வில் பரக்கக் காணலாம்.

சுதேச நண்பன்:- வருட சந்தா உள்நாடு ரூ 2—0—0, வெளிநாடு ரூ. 2—8—0. இம்மாஸிகையின் முதல் இதழ் வரப்பெற்றோம். ஆரம்பத்திலிருந்தே இதன் நடையும், முற்போக்கான கொள்கையும் நன்கு விளங்குகின்றன. சுகாதாரம, நட்பு மாதர் பெருமை முதலிய அரிய விஷயங்களைப் பற்றி இனிய எளிய நடையில் பலகட்டுரைகள் இதை அணிசெய்கின்றன. பத்திரிகையின் அமைப்பும்தோற்றமும் அழகுடன்விளங்குகின்றன. தமிழ் மக்கள் மாதந்தோறும் அரிய விஷயங்களுடன் வெளிவரும் சுதேச நண்பனைப் படித்துப் பெரும் பேறுபெறும்படி வேண்டுகின்றோம். இதன் ஆசிரியர் ஸ்ரீ எம்.கே.ஒ. முகம்மது இப்ராஹீம்

விலாசம்:— சுதேச நண்பன் கார்யாலயம்,
63, 29-வது வீதி இரங்கோன்.

# TALISMANS AND CHARMS

**For those People to avoid all Sorts of Misfortunes and enter the Gates of Successful life.**

| | Rs. | A. |
|---|---|---|
| For Honour, Riches, Learning and Greatness | 7 | 8 |
| For Health, Physical Strength, etc. | 7 | 8 |
| For Power of Eloquence, Speeches, etc. | 7 | 8 |
| For Success in any Undertaking or Litigation, etc. | 10 | 0 |
| For Success in Sport, Racing, Cards, Games of Chance etc. | 7 | 8 |
| For Success in Spiritual and Religious Life | 10 | 0 |
| For Success in Trade and Business | 10 | 0 |
| For Men's Love to Women | 7 | 8 |
| For Women's Love to Men | 10 | 0 |
| For Love of Opposite Sex, Attractive Power | 7 | 8 |
| For Agricultural Prosperity, Farming, Good Crops, etc. | 7 | 8 |
| For Success in Mining Plumbago, etc. | 100 | 0 |
| For Success in Gemming | 225 | 0 |
| Rabbi Solomon's Special Talisman for every success | 15 | 0 |
| Specially valued and worn by every successful Hebrew, 2nd qualiy | 21 | 0 |
| 1st quality | 30 | 0 |

NOTE.— A Money Order or G. C. Notes will bring the Talisman to your door. One Extensive Life Reading Rs. 15, two Rs. 25, three Rs. 30 or more at a time at Rs. 10 per reading. Remit with birth date. Always the full amount should be remitted in advance.

No. V. P. P. APPLY TO.—

**D. A. RAM DUTH**, Astrologer,
No. 30 & 55 (U. B.) Cheku Street,
COLOMBO. (Ceylon).

# சரீர மர்ம சாஸ்திரம்.

இந்த அருமையான நூலில் ஸ்திரி புருஷர் அநுபவிக்க வேண்டிய சம்சார சுகம், குடும்பரஹஸ்யம், மணவாழ்க்கையின் மர்மங்கள் அனைத்தும் ததும்பிக்கிடக்கின்றன. விவாக மானவர்களுக்கும், இனி விவாகம் செய்து கொள்ளப் போகும் ஸ்திரீ புருஷர்களுக்கும் வெகு அத்தியாவசியமானது.

64- படங்களுடன் விலை ரூ 1—0—0

மாணிக்க விலாசம் பிரஸ், நெ. 12, அருணாசல முதலி தெரு. சௌகார்பேட்டை, சென்னை.

# R. S. அற்புத மெஸ்மெரிக் ஆயில்,

பாஷாண சம்மந்தமான சரக்குகள் இதில் சேரவில்லை. பத்தியமில்லை. மனிதனுக்கு எத்தனை வியாதிவருமோ அவைகளுக்கெல்லாம் இந்த மருந்தை உபயோகிக்கலாம். ஏழையும் பணக்காரரும் அதிகப்பணம் கொடுத்து வைத்தியர்களைத் தேடவேண்டாம். இம்மருந்து ஒன்றுபோதும். மெஸ்மெரிக் ஆயில் வாசனை பட்டமாத்திரத்தில் விஷப்பூச்சிகள் மாண்டுபோகின்றன, விஷஜுரம் வாந்திபேதிபோன்ற வியாதிகளுக்குக் கைகண்டமருந்து தலைவலி கைகால் உளைச்சல், வயிற்றுவலி, கீல்பிடிப்பு, வாய்வு, இருமல் முதலிய அநேக வியாதிகள் இம்மருந்தால் தீருகின்றன. நரம்புகள் தளர்ந்து தேகம் வெளுத்தவர்களுக்கு சுத்த இரத்தத்தை உடல்முழுதும் பெருக்கி, பசியை உண்டாக்கி ஜீவசக்தியை தருகின்றன. ஒரு துளி சாப்பிட்டால் அதன் குணம் உடனே தெரியும். வலியை உடனே நிறுத்தும். தீராத ரோகங்களின் உபத்திரவத்தைத் தணிக்கும் அரியகுணம் இம்மருந்துக்குண்டு. ஒருமுறை இதை வாங்கி உபயோகித்தவர்கள் அடிக்கடி இதையே வாங்குகிறார்கள். புட்டி 1 க்கு விலை ரூ. 1—0—0

## மேல் பூச்சு உபயோகிக்கும் முறை.

தலைவலி முடக்குவாதம், மார்புவலி, கைகால் பிடிப்பு, இடுப்புவலி, காதுவலி, வெட்டுக்காயம், மேகரணம், சகலவிதப் புண்கள், ஊரல் போன்ற மேக வியாதிகளுக்கும் மெஸ்மெரிக் ஆயிலைத் தடவினால், ஆச்சரியமான குணமடையலாம்.

## உள்ளுக்கு சாப்பிடும் முறை.

எந்த வியாதிக்கும் எவ்விதமான பத்தியமுமில்லை. பித்தம், காமாலை, அஜீர்ணம், வாயு, இழுப்பு, தலை சுற்றல், சகல ஜுரங்கள், வயிற்றுப்போக்கு, வீக்கம், க்ஷயம், சுவாசகாசம் முதலிய எல்லா வியாதிகளுக்குப், மெஸ்மெரிக் ஆயில்போல் குணம உண்டாக்கக்கூடிய மருந்து வேறொன்றுமில்லை யென்றுகூறலாம். சகல வியாதிகளுக்கும் ஒரு அவுன்ஸ் சுத்த ஜலத்தில் அல்லது வெந்நீரில் 2 அல்லது மூன்று துளி மருந்து சேர்த்து ஒருநாளில் 3 வேளை சாப்பிடவேண்டும் பல்வலி முதலிய ரோகங்களுக்கு ஒரு டம்ளர் வெந்நீரில் 4 அல்லது 5 துளிவிட்டு வாய்கொப்பளிக்கவும். காதுகளில் சீழ்வடிந்தாலும் அல்லது வலியிருந்தாலும், ஒருதுளி மருந்தை காதில்விட்டு பஞ்சடைக்கவும். மருந்தை உபயோகிக்கு முன் காதுகளை நன்றாய்க் கழுவி சுத்தம் செய்து கொள்ளவேண்டும்.

**ராமய்யா அன்சன்ஸ்,**

எலக்ட்ரோ கெமிக்கல் ஒர்க்ஸ், வீரவநல்லூர். S. I. R,

# பாம்பே வல்லபை அத்தர்வாலா & கோ.

## பரிமளஸ்டோர், ரோஸ்வாட்டர், ஹேர் ஆயில், அண்டு ஒட்டோஸ் ஜெனரல் மெர்ச்சண்டு, கமிஷன் ஏஜண்டு, அண்டு சோல் ஏஜண்டு.

வடக்குரதவீதி, திருநெல்வேலிடவுண்.

நமது அபிமான நண்பர்களுக்கு ஓர் வேண்டுகோள். எமது பரிமள ஸ்டோரில், முதல் தரமான மைசூர் சந்தணம், மதுரை உயர்தர வாசனைச் சந்தணம், சாதா மிலாக்காக்கட்டைச் சந்தணம், சந்தணப் பவுடர், அத்தர் வில்லை, காஜோஜி, ஹீரான், பாம்பே பன்னீர், அசல் ஜவ்வாது, புனுகு, குங்குமப்பூ, பச்சைக்கற்பூரம், கோரோசனை, கஸ்தூரி, மட்டிப்பால் அத்தர் தினுசு வகையறாக்களும், ஊதுபத்திகளும், நன்னாரி, ரோஸ், ஆரஞ்சு சர்பத்துகளும், மொத்தமாயும் சில்லரையாயும் விற்கப் படும். ஒருமுறை அவசியம் பரீக்ஷியுங்கள்.

அன்பர்களே! உயர்ந்த தரம்—நிறைந்த குணம்! மணம், காரம், வசீகரம், ஆனந்தம் கொடுக்கக்கூடிய 'அத்தர்வாலா' பாலக்காடு வாசனைப் புகையிலையை வாங்கி உபயோகியுங்கள்.

V. P. ஆர்டர்களையும், தபால் ஆர்டர்களையும் அவசியம் கவனிக்கப்படும்.

ஸப் ஏஜண்டுகள் தேவை.

A. S. அம்பலவாணபிள்ளை,
ஏஜண்டு.

---

கம்பாலன்:- தமிழ்மாதப் பத்திரிகை, தென்னாட்டில் கம்மஜாதியப் பத்திரிகை இஃதொன்றே. கிராமவாசிகளுக் கவசியமான பொதுவிஷயங்கள் வெளிவரும். பத்திராதிபர், ஸ்ரீ R. வெங்கிடசாமி நாயுடு. விளம்பரங்கட்குத் தக்க சௌகரியமுண்டு. வருடசந்தா ரூ 1—0—0. உடனே எழுதுங்கள்.

காமதேனு:- (வருட சந்தா ரூ. 1—8—0) திருத்தங்கலிலிருந்து வெளிவரும் இம் மாதத் தமிழ்ப்பத்திரிகையில் வாழ்க்கையின் நான்கு கால்களுக்கு ஒப்பான விவசாயம், வியாபாரம், கைத்தொழில், கூட்டுறவு, ஆகிய விஷயங்களைப் பற்றிப் பல சுவையுள்ள வியாசங்கள் அடங்கியுள்ளன. ஸ்ரீ ஆர். ஆனந்தராவ் அவர்கள் இதன் ஆசிரியர். உடனே எழுதுங்கள்.

ஸ்ரீவில்லிபுத்தூர்

# பி. பி. அன் சன்ஸ்

## பிஸ்கட் பாக்டரி.

டாக்டர்களின் சர்டிபிகேட் பெற்றது.

**ஒருமுறை வாங்கி உபயோகித்துப் பாருங்கள்!**

**குழந்தைகளுக்குத் தகுந்த ஆகாரம்!**

**ஆரரூட் பிஸ்கட்**

**சிற்றுண்டிக்கு முதன்மைபெற்றது!**

**சூஸ்பரிபிஸ்கட் & பழம் கேக்!**

எல்லா முக்கிய இடங்களிலும் கிடைக்கும்.

ஏஜண்டுகள் தேவை.

---




**கே. எஸ். ராமய்யர் அன் கோ.,**

**ரப்பர் ஸ்டாம்பு மேக்கர்,**

சுவாமிசன்னதித்தெரு,

திருநெல்வேலி.

வடாம்! வத்தல்!! அப்பளாம்!!!

**பிராமணரால் செய்யப்பட்ட நயமான சாமான்கள்.**

நல்லதாகவும் ருசியாகவும் லேகுவாய் ஜீரணமாகக் கூடியதாகவும் செய்யப்பட்டது.

**எல்லாக் காலங்களிலும் உபயோகிக்கலாம்**

சாப்பிடுவேதற்கு இன்றியமையாதது.

1. வாழைத்தண்டு வடாம்
2. தேங்காய்த்துருவல் வடாம்
3. கரி வடாம்
4. அரிசி வடாம்
5. கலவை வடாம்
6. கூழ் வடாம்
7. அவல் வடாம்
8. நயம் அப்பளாம்
9. மோர் மிளகு வத்தல்

☞ சகாயமான விலைக்கு மொத்தமாகவும் சில்லரையாகவும் கொடுக்கப்படும்.

ஒரு முறை உபயோகித்துப் பாருங்கள்.

[ ஆர்டருடன் கால் பங்கு அட்வான்ஸ் அனுப்பவும். ]

அடியிற்கண்ட விலாசத்துக்கு எழுதித் தருவித்துக்கொள்ளவும்:

எஸ். ஆர். சுப்பிரமணிய அய்யர், காபி ஹோட்டல் &வியாபாரம்

திருநெல்வேலி ஜங்ஷன்.

---

**ஸ்ரீசுந்தரம் சாய நெசவு கம்பெனி லிமிட்டெட்**

**திருநெல்வேலி.**

| | | | |
|---|---|---|---|
| இந்திய மில் 20 நிர். நூல் 54" அகலம் பலவிதக் கரை, சலவை வேஷ்டி கஜம் 1-க்கு ரூ | 0 | 8 | 0 |
| ஷை 40 நிர். ,, ,, கஜம் 1-க்கு ரூ | 0 | 9 | 0 |
| நெட்டுவில் சலவை 4x7 கஜம் 34" அகலம் ,, மடி 1-க்கு ரூ | 2 | 8 | 0 |
| ஷை ,, 4x6 ,, 34" அகலம் மடி 1-க்கு ரூ | 2 | 4 | 0 |
| ஷை ,, 4x8 ,, 36" அகலம் மடி 1-க்கு ரூ | 3 | 0 | 0 |
| 36"x2 கஜம் கெட்டிச்சாய ஜமக்காளம் உரு 1-க்கு ரூ | 3 | 0 | 0 |
| 28"x12 கஜம் ஷர்டிங் சலவை பீஸ் 1-க்கு ரூ | 3 | 0 | 0 |

☞ கூட்ஸில் மட்டும் ரயில் சார்ஜன்னியில் சரக்குகள் அனுப்பக்கூடும். ரொக்கவிலை.


---


Printed at the Meeraniah Press, Tinnevelly
and Published by P. Ramaswamy Ayengar, Tinnevelly.

ஒவ்வொரு தமிழபிமானி யிடமும் கீழ்க்கண்ட புஸ்தகங்கள் இருக்க வேண்டியது அத்யாவசியம்.

1. மனோன்மணீயம் (சிறந்த தமிழ் நாடகம்) ரூ. 2 8 0
2. கம்பராமாயணம் (பாலகாண்டம்) கனக சுந்தரம்பிள்ளை பதிப்பு ரூ. 2 0 0
3. ,, (சுந்தரகாண்டம்) வாணி விலாஸ்பதிப்புரூ 2 0 0
4. நந்திக் கலம்பகம் (விரைவில் வெளிவரும்)
5. மேகமாலை (மேகங்களைப்பற்றியசந்ததரங்கம்) (விரைவில் வெளிவரும்)
6 சைவஅநுஷ்டானவிதி(ஒவ்வொருசைவரிடமும் இருக்க வேண்டியது) விரைவில் வெளிவரும்.
7. கிஷ்கிந்தா காண்ட உரை ரூ. 4 8 0
8. சுந்தர காண்ட உரை ரூ. 5 0 0
9. பிரதாப முதலியார் சரித்திரம் ரூ. 1 2 0
10. பக்தவிஜயம் (உயர்ந்த பதிப்பு. அநேக பக்தர்களின் படங்களுடன்) ரூ. 6 0 0
11. நாலடியார்உரை ரூ. 2 0 0
12. திருக்குறள் ஊரை ரூ. 4 0 0

புஸ்தகங்கள் கிடைக்கு மிடம்:—

[ஜனோபகாரி, லெக்ஷிமி, கமருஸ்ஸமான், உதயபாரதி முதலிய பத்திரிகைகளுக்குப் பிரதிநிதி]

S. முத்தையபிள்ளை,
புஸ்த்தக வியாபாரம்,
திருநெல்வேலி ஜங்ஷன்.